# ஜின்களைப் பற்றிய மர்மங்கள்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

## ஜின் என்றால் என்ன?

*'என்னை வணங்குவதற்காக அன்றி நான் (அல்லாஹ்) ஜின்களையும் மனிதர்களையும் படைக்கவில்லை.'*

*(திருக்குர்ஆன் - 51:56)*

அல்லாஹ் மேற்கூறிய திருவசனத்தில் ஜின் இனத்தையும், மனித இனத்தையும் படைத்திருப்பதன் அடிப்படை நோக்கத்தை விளக்குகிறான். அதாவது அவ்விரு இனத்தவரும் அல்லாஹ்வை அறிந்து விளங்கி வணங்குவதற்கே படைக்கப்பட்டுள்ளனர்.

படைப்பின் முதல் நோக்கம் வணங்கி வழிபடுவதே! மற்ற பிற நோக்கங்கள் யாவும் அவ்வணக்கத்தையே தொடர்ந்து இவ்வுலகில் செயலாற்றப்பட வேண்டும் என்பதாகும்.

### முதல் படைப்பு!

அல்லாஹ் முதன்மையாகப் படைத்தது 'ஜின்' இனத்தையேதான் என்பது ஏற்றுக் கொள்ளத்தக்க உண்மையாகும். காரணம் அருள்மறை குர்ஆனில் 'பகரா' என்னும் ஸூராவில்,

'மேலும், 'நிச்சயமாக! நான் பூமியில் ஒரு பிரதிநிதியை உண்டாக்கப் போகிறேன்' என்று உம் இரட்சகன் (தன் மலக்குகளுக்குக் கூறியபோது) 'அ(ந் நிலத்)தில் விஷமம் செய்கின்றவர்களையும், இரத்தம் ஒட்டுபவர்களையம் நீ உண்டாக்கப் போகின்றாயா? நாங்களோ உன் புகழைக் கொண்டு உன்னைத் துதிக்கின்றோம். மேலும் உன்னைப் பரிசுத்தப்படுத்துகின்றோம். உன்னுடைய பரிசுத்தத்தை வெளியாக்குகின்றோம்' என அ(வ் வானவ)ர்கள் கூறினர். அதற்கு அ(வ்விறை)வன், 'நீங்கள் அறிந்து கொள்ளாதவற்றை நிச்சயமாக நான் அறிவேன்' என்று கூறினான்.

மேற்காணும் இறை வசனத்தில் இரண்டு செய்திகள் நமக்கு உணர்த்தப்படுகின்றன.

1. முதல் மனிதர் படைக்கப்படும் முன்னரே அவர் உலகில் என்ன காரணத்திற்காகப் படைக்கப்படப் போகின்றார் என்பதையும்,

2. அம்மனிதர் படைக்கப்படுவதற்கு முன் இவ்வுலகில் படைக்கப்பட்டிருந்த இனம் எது என்பதையும் நாம் உணர வேண்டியுள்ளது.

இதோ! மனிதப் படைப்பிற்கு முன்னர் உலகில் தோற்றுவிக்கப் பெற்ற இனம் எது என்பது பற்றிய ஆதாரம் :

மனிதப் படைப்புத் தோன்றுவதற்கு முன்னர் இவ்வுலகில் 'ஜின்'களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. ஆட்சியின் ஆணவத்தால் அவர்கள் பாவங்கள் பல செய்து இவ்வுலகை அசுத்தமாக்கி விட்டனர். கொலை, விஷமம் முதலிய பாதகங்கள் மிகுதியாகப் பரவியிருந்தன.

இன்னோரின் ஆதிக்கத்தை இறைவன் ஒழித்தான். இவர்களில் பெரும்பாலோர் மலக்குகளால் கொல்லப்பட்டனர். இவர்களில் தப்பித்துக் கொண்டோர் மலைப் பொதும்புகளுக்கும், கடல் தீவுகளுக்கும் சென்று மறைந்து வாழலாயினர். அவ்வினத்தவரில் ஒருவனே இப்லீஸ் எனப்படுபவன். அவன் தன் தவறுகளை உணர்ந்து வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கோரி வணக்கத்தில் மூழ்கி பக்தனாக மாறினான்.

'புவியிலிருக்கின்ற மலக்குகளுடன் சேர்ந்து கொண்டு அவர்களுள் ஒருவனாகி விட்டான்.'

*அறிவிப்பவர் : ஹல்ரத் ஹஸன் கதாதா (ரஹ்), நூல் : ஹக்கானி*

எனவேதான் வானவர்கள், 'அல்லாஹ்வே! உலகில் கொலையின் மூலம் இரத்தம் சிந்தக் கூடியவர்களையா நீ படைக்கப் போகின்றாய்? ஏற்கனவே உலகில் கொலையும், விஷமங்களும் செய்து வந்தவர்கள்தாமே இருந்தனர்!' என வினவியபோதுதான். அல்லாஹ் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் அறியாதவற்றை நான் நன்கு அறிவேன்'என்று கூறினான்.



## ஜின்களைப் பற்றி குர்ஆன்

'அதற்கு (மனிதனைப் படைப்பதற்கு) முன்னதாக ஜின்களைக் கொடிய உஷ்ணமுள்ள நெருப்பிலிருந்து படைத்தோம்.'

*(15:27)*

திருக்குர்ஆனின் வசனப்படி ஷைத்தானும் ஜின் இனத்தைச் சார்ந்தவன்தான்.

'அவனோ (இப்லீஸ்) ஜின்களின் இனத்தைச் சேர்ந்தவன்.'

*(18:50)*

'நீ (அல்லாஹ்) என்னை நெருப்பால் படைத்தாய்.'

*(7:12)*

'(இறைவன் இப்லீஸை நோக்கி), 'நான் உனக்குக் கட்டளையிட்ட சமயத்தில் நீ சிரம் பணியாதிருக்கும் படி உன்னைத் தடை செய்தது எது?' என்று கேட்டான். அதற்கு (இப்லீஸ்), 'நான் அவரை விட மேலானவன். (ஏனென்றால்) நீ என்னை நெருப்பால் படைத்தாய். அவரைக் களிமண்ணால் படைத்திருக்கின்றாய். (களி மண்ணை விட நெருப்பு உயர்ந்தது)' என்று (இறுமாப்புடன்) கூறினான்.'

*(7:12)*

தானே மனிதனை விட உயர்ந்தவன் என்னும் எண்ணமே இப்லீஸை ஆணவம் கொள்ளச் செய்தது. அந்த ஆணவமே அவனை மேல் நிலையிலிருந்து கீழ் நிலைக்கு இறக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்து விட்டது.

விண்ணுலகில் வணக்க வழிபாடுகள் செய்து கொண்டிருந்த இப்லீஸ் ஆணவம் கொண்டதால் அல்லாஹ் அவனை நோக்கி,

'(அதற்கு இறைவன்,) 'நிந்திக்கப்பட்டவனாகவும், வெருட்டப்பட்டவனாகவும் நீ இதிலிருந்து வெளியேறி விடு. நிச்சயமாக (உன்னையும்,) அவர்களில் உன்னைப் பின்பற்றியவர்களையும் ஆக உங்கள் யாவரையும் கொண்டு நிச்சயமாக நரகத்தை நிரப்புவேன்' என்று கூறினான்.

*(7:18)*

## 1. ஜின் பற்றிய விளக்கம்

வல்ஜான்னு ஹயவானுன் ஹவாயிய்யுன்

நாரிய்யுன் நாதிகுன் ஸFப்Fபா Fபுல் ஜிஸ்மி

ஜின் என்பது நெருப்பு, காற்று இவற்றினால் படைக்கப்பட்ட ஓர் உயிரினமாகும். பேசும் ஆற்றல் பெற்றவை. தெளிவான உடலமைப்பு கொண்டவை. அவை விரும்பியவாறு மாறுபட்ட வடிவங்களில் தோன்றக் கூடியவை.

ஜின்கள் உண்ணக் கூடியவை என்றும், மலக்குகள் எதையும் உண்ணாதவர்கள் என்றும் மேலும் பாவம் செய்வதை விட்டும் மலக்குகள் ஜின்களிலிருந்து மாறுபட்டவர்கள் என்றும் சிலர் கூறுகின்றனர்.

மேலும், ஜின்களில் கா∴பிர்களும், முஸ்லிம்களும் உள்ளன.

அல்லாஹ், மனிதர்களுக்கு நபிமார்களை அனுப்பி வைத்ததைப் போன்று, ஜின் இனத்தவர்களுக்கும் நபியை அனுப்பி வைத்தான்.

*- தவ்ஹீதுல் காலிக், பக்கம் - 76*

வ∴ப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : அல்லாஹு தஆலா சூடும், புகையுமல்லாத நெருப்பை உண்டாக்கி அதிலிருந்து ஜானைப் படைத்தான். அந்நெருப்பிலிருந்து மாறிஜு என்னும் வலிமையான ஒரு படைப்பினைப் படைத்தான்.



அப்படைப்பின் மூலம் ஜானுக்கு மனைவியை ஏற்படுத்தினான். அப்பெண்ணுக்கு மாரிஜா என்று பெயர் சூட்டினான். மாறிஜு என்பவன் மாரிஜாவுடன் கூடி ஜான் என்னும் பிள்ளையை மாரிஜா ஈன்றாள். ஜானுக்கு ஜின் என்னும் ஒரு பிள்ளை பிறந்தது. ஜானிலிருந்து வழித் தோன்றல்களாக எண்ணற்றவர்களை மண்ணில் வாழச்செய்தான். அக்கூட்டத்திலிருந்து இப்லீஸ் தோன்றினான்.

ஜின்னுக்கு ஓர் ஆண் பிள்ளையும், ஒரு பெண் பிள்ளையும் பிறந்தன. ஆண் பிள்ளையைப் பெண் பிள்ளைக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டது. அவர்களிலிருந்து எழுபதினாயிரம் ஆண் மக்கள் உண்டாயினர்.

ஜின்களில் இருந்தும் ஒரு பெண்ணை இப்லீஸ் திருமணம் செய்து கொண்டான். அப்பெண்ணின் பெயர் றூக்கா என்பதாகும். அப்பெண் ஜல்ஸாயீல் என்னும் ஜின்னின் மகள். அந்த ஜல்ஸாயீல் ஜானுடைய மகள் ஆவாள்.

றூக்கா என்பவள் இப்லீஸுக்கு புத்தூன், குத்தூனா என்னும் இரண்டு பிள்ளைகளை ஒரே சூலில் பெற்றாள். பின்னர் சுகல, டிகுலா என்னும் பெயரிலும், தகறு, தகறா என்றும் பெயரிலும் இரட்டைப் பிள்ளைகளை ஒரே சூலில் பெற்றாள்.

பின்னர், ஷைசான், ஷைசானா என ஒரே சூலில் இரண்டு பிள்ளைகளை ஈன்றாள். பின்னர் கபுத்தசு, கபுத்தசா என ஒரே சூலில் இரு பிள்ளைகளைப் பெற்றாள். பின்னர் பிள்ளைகள் எறும்புகள், கொசுக்கள், வெட்டுக் கிளிகளைப் போன்றும், பறவைகளைப் போன்றும் பல்கிப் பெருகின.

காடுகளிலும், மலைப் பகுதிகளிலும், மற்றப் பகுதிகளிலும் குடியிருந்தார்கள். பூமி முழுவதும் நிரம்பினார்கள்.

அவர்கள் மனிதர்கள், ஊர்வன, கோவேறு கழுதைகள், ஆடு, மாடு, கழுதை, நாய், புலி முதலியவற்றின் உருவத்திலும் ஒப்பாயினர்.

பூமியை இப்லீஸின் வம்சத்தினர் நிரப்பிக் கொண்ட பொழுது அல்லாஹ் ஜானை மேலே உயர்த்திக் கொண்டான்.

ஜின்னையும், அதன் பிள்ளைகளையும் முன் வானத்தில் குடியிருக்கச் செய்து தன்னை வணங்கி வருமாறு ஏவினான். பின்னர், அல்லாஹு தஆலா, 'நான் இரண்டு வீடுகளை உண்டாக்கினேன். ஒன்று என்னுடைய 'ரஹ்மத்' என்னும் அருளிலிருந்தும், மற்றொன்று 'கலபத்' என்னும் கோபத்திலிருந்துமாகும். அவ்விரு வீடுகளையும் காணுங்கள்' என வானவர்களுக்கு செய்தியறிவித்தான்.

அப்பொழுது வானவர்கள் 'ஜஹன்னம்' என்னும் நரகத்திலுள்ள மேல்தட்டு, கீழ்த் தட்டுகளையும், அதனுள் நிகழும் வேதனைகளையும் பார்த்து அமைதி கொண்டார்கள்.

பின்னர் சுவனத்தில் அதன் நிஃமத்துக்கள் என்னும் அருட்கொடைகளையும், அல்லாஹ்வால் சொர்க்கத்தில் நுழையவிருப்பவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளவற்றையும் கண்ணுற்று நன்மாராயம் கூறி,

'இறைவா! இப்பகுதியை எவருக்காகப் படைத்துள்ளாய்?' என வினவினர். அல்லாஹ் சுவர்க்கத்தைப் பேசுமாறு ஆணையிட்டான்.

'முஃமின்களில் ஈடேற்றம் பெற்றவர்களுக்காக என்னைப் படைத்துள்ளான்' என்று அது கூறியது.

'முஃமின்களில் அவர்களின் அபிமானத்தைப் பேணிக் கொண்டவர்களுக்கே' என சுவர்க்கம் கூறியது.

பின்னர், அல்லாஹு தஆலா, என்னுடைய கைகளினால் படைத்து என்னுடைய ரூஹிலிருந்து (உயிரை) ஊதி, என்னுடைய வானவர்களாகிய மலக்குகளை ஸுஜுது செய்யுமாறு பணித்து, என்னுடைய படைப்பினங்கள் அனைத்தையும் விட மேன்மையாக்கி வைத்தேன் அல்லவா? அவர்களுள் சிறந்தவர்களுக்காக, எனக்கு வழிபட்டு



வாழ்ந்தவர்களுக்காக இந்த சுவர்க்கத்தை நான் படைத்தேன்' எனக் கூறினான்.

மேலும் வஃப் (ரலி) அறிவிக்கின்றார்கள் : வானம் பெருமை கொண்டு பூமியைப் பார்த்துக் கூறியது, 'வல்லோன் அல்லாஹ் என்னை உன்னை விட மேன்மையாக்கி வைத்துள்ளான்.'

'நான் கண்ணியம் வாய்ந்த படைப்பாவேன். வானவர்கள் குடியிருக்கும் இடம் என்னில்தான். என்னில்தான் அல்லாஹ்வின் அர்ஷும், குர்ஸீயும், புலரும் பொழுதும், நட்சத்திரங்களும் அமைந்துள்ளன.

'ரஹ்மத்தின் கருவூலங்கள் (கஜானா) யாவும் என்னிலேயே உள்ளன. வஹீயே என்னிலிருந்துதான் உனக்கு இறங்குகிறது.'

இதனைக் கேட்ட பூமி, 'இறைவா! என்னைத் தண்ணீரால் நிரப்பினாய். மரங்களின் வேர்களை என்னில் பரவச் செய்தாய். அருவிகளை என்னில் ஒலித்தோடச் செய்தாய். என் முதுகின் மீது மலைகளை ஊன்றினாய்.

மரங்களையும், பழங்களையும் என்னில் படைத்தாய். அல்லாஹ்வே! இவற்றையெல்லாம் நீ எவருக்காகப் படைத்தாய்? வானம் என்னிடம் பெருமை பேசியதை நீ அறிவாய்!

என் முதுகின் மீது எவரும் என்னை நினைப்பவர்கள் இல்லையே, நான் வெறுமையாகவன்றோ உள்ளேன்' எனக் கவலையுடன் இறைவனிடம் கூறியது.

'நீ உன் வாயை மூடு. உன்னிலிருந்து (மண்ணிலிருந்து) ஒரு படைப்பை (வடிவத்தை)ப் படைப்பேன். அழகிலும், தெளிவிலும் அதற்கொப்பாக எதுவுமிருக்காது.

அப்படைப்பிற்கு 'அகல்' என்னும் அறிவையும், இளமையையும் கொடுப்பேன். அப்படைப்பின் மீது என் வேதங்களை இறக்கியருள்வேன். பின்னர், உன்னுடைய முதுகையும், வயிற்றையும், உன் மேற்குத் திசையையும்,

கிழக்குத் திசையையும், உன்னுடைய நிறத்திலும், உயிரிலும், உடலிலும் அதை நிரப்பி வைப்பேன். அதன் மூலம் நீ வானத்திடம் பெருமையாடி, நன்மாராயம் பெற்றுக் கொள்வாயாக!' என இறைவன் கூற, பூமி அமைதி கொண்டு வெளுத்து வெண்மையாகி விட்டது.

அதன்பின் ஜான் நிலவுலகைப் பார்த்தான். அந்நிலவுலகில் படைக்கப்பட்டிருந்த மிருக இனங்களைக் கண்டபோது, அல்லாஹ்விடம் பூமியில் இறங்கி வாழ அனுமதி கேட்டதும்,

அல்லாஹ் பூமியில் இறங்கித் தன்னை வணங்கி வழிபடவும், தனக்கு மாறு செய்யாமலிருக்கவும் பணித்து வாக்குறுதி வாங்கியபின் ஜின்களில் எழுபதினாயிரம் பேர்களை நிலவுலகில் இருந்து பூமியில் இறக்கினான்.

அந்த ஜின் இனத்தார் நீண்ட காலம் அல்லாஹ்வை வணங்கி வழிபட்டு வந்தனர். பின்னர் கால ஓட்டத்தில் பாவங்கள் செய்திடவும், இரத்தம் சிந்தவும் தொடங்கினார்கள்.

பூமி, 'என்னுடைய இறைவா! என் முதுகில் பாவங்கள் செய்பவர்கள் இருப்பதை விட, உனக்கு மாறுசெய்பவர்கள் இருப்பதை விட நான் இல்லாதொழிவதே மேல். அதுவே உனக்கு மிக விருப்பமானதாகும்' எனக் கூறியபோது அல்லாஹ் பூமிக்கு செய்தி அறிவித்தான்.

'பூமியே! வாயை மூடு. ஜின்களிடம் நான் ரஸூல்மார்களை அனுப்பி வைக்கிறேன்' என்றான். க∴புல், அ∴பார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : அந்த ஜின் இனத்தவர்களிடம் அனுப்பி வைக்கப்பட்ட முதல் நபி ஆமிரிப்னு உமைரிப்னு ஜான், பின்னர் சாகிகுபுனு, பாக்கிபுனு, மாரிதுபுனு ஜான் பின்னர் முந்நூறு ஆண்டுகளில் முன்னூறு நபிமார்களை அனுப்பி வைத்தான்.



அந்த ஜின்கள் அந்த நபிமார்களைக் கொன்று விட்டனர். அவர்கள் நபிமார்களைப் பொய்யர்களாக எண்ணிப் புறக்கணித்த பொழுதே விண்ணுலகில் இருந்து ஜின்களை பூமிக்கு இறக்கி, பூமியில் அட்டூழியம் செய்து வந்த ஜின்களைக் கொன்றொழித்துவிடுமாறு வஹீ அனுப்பினான்.

அந்த ஜின் இனத்தவர்கள் மீது இப்லீஸ் இறங்கி அவனும் அவன் கூட்டத்தவர்களும் அந்த ஜின்களுடன் போரிட்டு அவர்களை வேறு இடத்திற்குத் துரத்தி விட்டனர்.

குறிப்பிட்ட அந்த இடத்தில் ஜின் கூட்டத்தார்கள் குழுமியிருந்த சமயம் அல்லாஹு தஆலா அவர்கள் மீது நெருப்பை இறக்கி சுட்டுக் கரிக்கச் செய்தான். அதன் பின்னர் பூமிக்கு இறக்கப்பட்ட இப்லீஸும் மற்ற ஜின்களும் அல்லாஹ்வை வணங்கி வந்தனர். இப்லீஸின் வணக்க வழிபாடுகள் ஜின்களின் வணக்க வழிபாடுகளை விட மிகவும் அதிக அளவில் இருந்தது. பின்னர் அல்லாஹ் இப்லீஸின் வணக்க வழிபாடுகளை மெச்சி அவனை முதல் வானத்திற்கு உயர்த்தி வைத்தான். அம்முதல் வானத்தில் ஆயிரம் ஆண்டுகள் வணங்கினான். பின்பு இரண்டாம் வானத்திற்கு உயர்த்தப்பட்டான். அவ்விரண்டாம் வானத்திலும் ஆயிரம் ஆண்டுகள் வணங்கினான். இவ்வாறு ஏழு வானத்திற்கு உயர்த்தப்பட்டபின் ஒவ்வொரு வானத்திலும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வணங்கினான். இப்லீஸ் உயர்வான இடத்தையடைந்து விட்டான்.

ஜிப்ரயீல், மீக்காயீல் மற்றும் அனைத்து வானவர்களும் கூறுவார்கள் : 'அல்லாஹு தஆலா இந்த அடியானுக்கு கொடுத்திருந்த இபாதத்தின் வலிமையை எந்த வானவருக்கும் கொடுக்கவில்லை' என்று.

## 2. ஜின் இனத்தவர் குர்ஆனைச் செவியுற்ற நிகழ்ச்சி!

திருக்குர்ஆனில் 'ஜின்' என்னும் ,தலைப்பில் ஓர் அத்தியாயமே இருக்கின்றது. அவ்வத்தியாயத்தில் ஜின்கள் திருமறை வசனங்கள் ஓதப்பட்டதைச் செவி தாழ்த்திக் கேட்ட நிகழ்ச்சி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதைக் காண்போம் :

1. 'நிச்சயமாக, ஜின்களில் சிலர் (திருக் குர்ஆனை) செவிமடுத்து (தம் இனத்தாரிடம் சென்று,) 'நிச்சயமாக நாங்கள் மிகவும் ஆச்சரியமான ஒரு குர்ஆனைக் கேட்டோம்' என்று கூறினர்' என்று எனக்கு 'வஹீ' அறிவிக்கப்பட்டதென்று (நபியே!) நீர் கூறுவீராக!'

*(72:1)*

2. 'அ(ந்தக் குர்ஆனான)து, நேரான வழியைக் காட்டுகிறது. ஆகவே அதனைக் கொண்டு நாங்கள் ஈமான் கொண்டோம். அன்றியும், எங்கள் இறைவனுக்கு ஒருவனையும் நாங்கள் இணையாக்க மாட்டோம்' (என்று அந்த ஜின்கள் கூறினார்கள்.)'

*(72:2)*

3. 'மேலும் நிச்சயமாக எங்கள் இறைவனுடைய மகத்துவம் மிக உயர்ந்தது. அவன் எவரையும், (தன்) மனைவியாகவோ, மக்களாகவோ எடுத்துக் கொள்ளவில்லை.'

*(72:3)*

4. 'ஆனால் நிச்சயமாக நம்மில் மூடராகிவிட்ட (சிலர்) அல்லாஹ்வின் மீது அளவு கடந்து பொய் சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.'

*(72:4)*

5. 'மேலும், 'மனிதர்களும் ஜின்களும் அல்லாஹ்வின் மீது பொய் கூறவே மாட்டார்கள்' என்று நிச்சயமாக நாம் எண்ணிக் கொண்டிருந்தோம்.

*(72:5)*



6. 'ஆனால், நிச்சயமாக மனிதர்களிலுள்ள ஆடவர்களில் சிலர் ஜின்களிலுள்ள ஆடவர்கள் சிலரிடம் பாதுகாப்புத் தேடிக்கொண்டிருந்தனர். இதனால் அவர்கள் (ஜின்களிலுள்ள) அ(வ்வாட) வர்களின் மமதையைப் பெருக்கி விட்டனர்.'

*(72:6)*

7. 'இன்னும் நிச்சயமாக அவர்களும் நீங்கள் எண்ணியதைப் போலவே, அல்லாஹ் ஒருவரையும் மறுமையில் உயிர்ப்பித்து நிச்சயமாக எழுப்ப மாட்டான் என்று எண்ணிக் கொண்டிருந்தனர்.'

*(72:7)*

8. 'இன்னும் நிச்சயமாக நாம் வானத்தைத் தொட்டுப் பார்த்தோம், அது கடுமையான காவலாளிகளாலும், தீப்பந்தங்களாலும் நிரப்பப்பட்டிருப்பதை நாங்கள் கண்டோம்.'

*(72:8)*

9. 'மேலும், அ(வ் வானத்)தில் (மலக்குகள் பேசுவதை) செவிமடுப்பதற்காக (அதற்குரிய சில) இடங்களில் நாங்கள் அமர்ந்திருப்போம். ஆனால் இப்பொழுதோ எவன் அவ்வாறு செவிமடுக்க முயல்கிறானோ, அவன் தனக்காகக் காத்திருக்கும் தீப்பந்தத்தையே காண்பான்.'

*(72:9)*

10. 'அன்றியும், (இதன் மூலம்) பூமியில் இருப்பவர் களுக்குத் தீங்கு நாடப்பட்டிருக்கிறதா அல்லது அவர்களுடைய இரட்சகன் அவர்களுக்கு நன்மையை நாடி இருக்கின்றானா என்பதையும் நாங்கள் நிச்சயமாக அறியமாட்டோம்.'

*(72:10)*

11. 'மேலும் நிச்சயமாக நம்மில் நல்லோருமிருக்கின்றனர். இன்னும் நம்மில் அஃதல்லாதவரும் (தீயோரும்) இருக்கின்றனர். நாம் பல்வேறு வழிகளையுடையவர் களாகவும் இருந்தோம்.'

*(72:11)*

12. 'அன்றியும், நிச்சயமாக நாம் பூமியில் அல்லாஹ்வை இயலாமலாக்க முடியாது என்பதையும், அவனை விட்டு ஓடி ஒளிந்து கொள்வதாலும், அவனை (எங்கேயும்) இயலாம லாக்க முடியாதென்பதையும் நிச்சயமாக நாம் அறிந்து கொண்டோம்.'

*(72:12)*

13. 'இன்னும் நிச்சயமாக நாம் நேர்வழியை (குர்ஆனை) செவிமடுத்தபோது, நாம் அதன் மீது ஈமான் கொண்டோம். எனவே எவன் தன் இரட்சனை ஈமான் கொள்கிறானோ அவன் இழப்பை (நட்டத்தை)ப் பற்றியும் அநீதியைப் பற்றியும் பயப்படமாட்டான்.'

*(72:13)*

14. 'இன்னும் நிச்சயமாக நம்மில் (அல்லாஹ்வின் கட்டளைக்கு) முற்றிலும் வழிபட்டோரும் இருக்கின்றனர். இன்னும் நம்மில் (கட்டளைக்கு வழிபடாத) அநியாயக்காரர் களுமிருக்கின்றனர். ஆகவே, எவர் (கட்டளைக்கு) வழிபட்டனரோ அவர்களே தாம் நேரான வழியைத் தேடிக் கொண்டனர்.'

*(72:14)*

15. மேலும், (அல்லாஹ்வின் கட்டளைக்கு வழிபடாத) அக்கிரமக்காரர்களோ நரகத்திற்கு எரி விறகாகி விட்டனர்' என்று அந்த ஜின்கள் கூறின.'

*(72:15)*



ரிவாயத்து :

நபி (ஸல்) அவர்கள் 'உக்காழ்' சந்தைக்கு தங்கள் தோழர்களுடன் சென்றார்கள். அப்பொழுது பஜ்ரு தொழுகைக்குரிய நேரம் வந்தது. பஜ்ரு தொழுகையை ஒரு பேரீத்த மரத்தடியில் தம் தோழர்களுடன் ஜமாஅத்துடன் நிறைவேற்றினார்கள். இவர்கள் தொழுது கொண்டிருக்கும் போது ஜின்களின் ஒரு கூட்டம் இவர்கள் அருகே சென்றது. திருக்குர்ஆனை ஓதும் ஒலியைக் கேட்டதும் அவை அத்திருவசனங்களை செவிமடுத்துக் கேட்டனர் என்று இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

எனவே, இவ்வாயத்தின் மூலமும், இந்த அறிவிப்பின் மூலமும் அறிய வருவது என்னவென்றால் நபி (ஸல்) அவர்களை ஜின்கள் பார்த்ததாகத் தெரிய வரவில்லை.

அவ்வாறு பார்த்திருந்தால் 'குல் ஊஹிய இலைய்ய' தமக்கு வஹீ அறிவிக்கப்பட்டதாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. மேலும் நபி (ஸல்) அவர்கள் திருக்குர்ஆன் ஓதுவதை அவர்கள் கூடியிருந்து செவியேற்றதையும் நபி (ஸல்) அவர்கள் உணரவில்லை.

எனவே, மூன்றுக்கு அதிகமாகவும், பத்துக்கு குறைவாகவும் உள்ள ஜின்கள் நபி (ஸல்) அவர்கள் திருக்குர்ஆன் ஓதுவதைக் கேட்டனர் என்று தெரிகிறது.

மேலும், திருக்குர்ஆன் ஓதுவதை ஜின்கள் கேட்கின்றனர் என்னும் விவரத்தை அல்லாஹ் வஹீயின் மூலம் நபி (ஸல்) அவர்களுக்கு அறிவித்து, அவற்றை மனித இனத்தவருக்கும் கூறுமாறு கட்டளையிட்டதானது நபி (ஸல்) அவர்கள் மனித இனத்தவர்களுக்கு மட்டுமின்றி, ஜின் இனத்தவருக்கும் நபியாக இருக்கின்றார்கள் என்பதை மனித இனத்தவர்களுக்கு உணர்த்துவதற்காகத்தான்.

'ஜின்கள் கூட இதனை ஈமான் கொள்கின்றனர். மனித இனத்தவர்களாகிய நீங்கள் அதனை ஈமான் கொள்ளாதிருக்கக் காரணமில்லை' என்பது இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், 'நீங்கள் மனிதர்களாக இருந்தும், நம் நபியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தும், நம் நபியும் நீங்களும் ஒரே மொழியைப் பேசக் கூடியவர்களாக இருந்தும், அவர்களின் போதனையை ஏற்க மறுப்பதுதான் விந்தையாக இருக்கிறது.

'அன்றியும், நீங்கள் ஜின்களை வணங்குகிறீர்கள், அவர்களிடம் உங்களின் எல்லாத் தேவைகளுக்கும் உதவி தேடுகிறீர்கள். அந்த ஜின்களோ நம்முடைய குர்ஆனை ஏற்கின்றனர். நீங்களோ மறுக்கின்றீர்கள். இது மிகப்பெரிய விந்தையாகும்.

'எனவே, அவர்களின் இந்நிலையை அறிந்த பின்னரேனும் தெளிவு பெறுங்கள்' என்னும் அறிவுரையும் இதன் மூலம் உணர்த்தப்படுகின்றது.

ரிவாயத்து :

ஈஸா இப்னு ஹுரைத் (ரலி) என்பவர்கள் கூறுகின்றார்கள் : நான் அப்துல்லாஹிப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களுடன் இருந்தேன். அப்போது ஒரு மனிதர் வந்து,

நாங்கள் பயணம் செய்தோம். வழியில் காயமடைந்த ஒரு பாம்பு இரத்தத்தில் தோய்ந்து துடித்துக் கொண்டிருப்பதை நாங்கள் கண்டோம். எங்களில் ஒருவர் தம் தலைப்பாகை யிலிருந்து ஒரு துண்டைக் கிழித்து எடுத்து அப்பாம்பின் மீது சுற்றி அதனை அடக்கம் செய்தார்.

அதன்பின் நாங்கள் இரவில் ஓர் இடத்தில் தங்கியபொழுது எங்களிடத்தில் அழகான இரு பெண்கள் வந்தனர். அவர்கள் ஜின் இனத்தைச் சேர்ந்தவர்கள். (என்று பின்னர் அறிந்தோம்.)



அவர்கள் வந்து, 'அவருடைய தோழர் அதாவது நீங்கள் அடக்கம் செய்தீர்களே அந்தப் பாம்பின் தோழர் உங்களில் எவர்?' என்றனர்.

அவ்விருவருக்கும் அவரை நாங்கள் காட்டினோம். 'அவர்தாம் ரஸூல் (ஸல்) அவர்கள் திருக் குர்ஆன் ஓதுவதை செவியேற்றவர்களில் கடைசியானவர். ஜின்களில் கா∴பிர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சண்டை நடந்தது. அவர் வெட்டப்பட்டார். அவரை அடக்கம் செய்தமைக்காக நீங்கள் அதற்குரிய இவ்வுலகில் (அதாவது இவ்வுலகில் பிரதிபலனை) விரும்புவீர்களாயின் உங்களுக்கு நாங்கள் பிரதிபலனை அளிக்கின்றோம்' என்று கூறினார்கள்.

அதற்கு நாங்கள், 'இல்லை, அதனை நாங்கள் செய்தது அல்லாஹ்வுக்காகத்தான்' என்றோம். அதற்கு அவ்விரு பெண்களும், 'நல்லது செய்தீர்கள்' எனக் கூறிவிட்டுச் சென்றுவிட்டனர்.

பாம்பைத் துணியால் சுற்றி அடக்கம் செய்தவர் (ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்கள் மீது அவதூறு கூறிய நிகழ்ச்சியில் தொடர்பு கொண்ட) ஸ∴ப்வானுப்னு மி∴தல் என்பவர். இறந்த ஜின்னின் பெயர் அம்ருப்னு காபிர் என்பதாகும்.

மேற்கூறப்பட்ட ஐந்தாம் வசனத்தின் விளக்கம் என்னவென்றால், 'அல்லாஹ்வின் மீது எவரும் பொய் சொல்லவே மாட்டார்கள்' என நாங்கள் எண்ணியே அவர்களைப் பின்பற்றி, இறைவனுக்கு மனைவி மக்கள் இருப்பதாகக் கருதி வந்தோம். நாங்கள் திருக் குர்ஆனைச் செவியுற்ற பின்னர்தான் எங்களுக்கு உண்மை தெளிவாயிற்று.

இவர்கள் அல்லாஹு தஆலாவின் மீது பொய்யுரைத்திருக் கிறார்கள் என்பதை உணர்ந்தோம் என்று மேற்கண்ட ஜின்கள் தாங்கள் முன் செய்த செயல்கள் குறித்து வருத்தமுற்றனர்.

அல்லாஹுதஆலாவின் மீது பொய்யுரைத்தவர்கள் யார்? அவர்கள்தாம் கிறிஸ்தவர்களும், யூதர்களுமாவர். அவ்விரு

மதத்தவர்களும் ஈஸா (அலை) அவர்களையும், உஜைர் (அலை) அவர்களையும் தேவ குமாரர்கள் எனக் கூறுவார்கள்.

இவ்விருவரையும் பெற்றெடுத்த மாதாக்கள் இருவரும் இறைவனின் வாழ்க்கைத் துணைவிகள் என்று ஆகிவிடுகிறது. மனிதனுக்குத்தான் மனைவி மக்கள் தேவைப்படுகின்றனர். காரணம் அவர்கள் பின்னர் அழியக் கூடியவர்கள்.

ஆகவே, ஜின் இனத்தவர்கள் இவர்களின் பொய்க் கூற்றையும், இவ்விரு மதத்தவர்களின் கொள்கைகளையும் ஏற்கவில்லை என்பதையும் இவ்வசனம் உணர்த்துகிறது.

6-ம் வசனத்தின் விளக்கம் காண்போம் :

மனிதர்களிலுள்ள சில ஆண்கள் ஜின்களிலுள்ள சில ஆண்களைக் கொண்டு பாதுகாப்புத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

### ஷைத்தானிடம் பாதுகாப்புத் தேடல் :

அஞ்ஞான காலத்தில் அரபியர்களில் எவரேனும் பயணம் செய்து கொண்டிருக்கும்போது மனித சஞ்சாரம் அற்ற காட்டில் இரவு தங்க நேர்ந்தால், 'இவ்விடத்தின் தலைவனிடம் அவனுடைய கூட்டத்தாரில் தீயோரின் தீங்கை விட்டும் நான் காவல் தேடுகிறேன்' எனக் கூறிக் கொண்டு அவ்விடத்தில் இரவைக் கழிப்பர். எத்தகைய தீங்குமின்றி காலையில் எழுந்து செல்வர்.

*- காஜின் அஹ்ஸனுத் தபாஸீர்*

இந்நிகழ்ச்சியை ஜின் இனத்தவர் இங்கு குறிப்பிட்டு, இவ்வாறு மனித இனத்தவர் அவர்களிடம் பாதுகாப்புத் தேடிக் கொண்டு வந்ததன் காரணமாக ஜின் இனத்தவருக்கு மமதையும் கர்வமும் தலைக்கேறி விட்டன என்னும் கருத்தையும் குறிப்பிடுகின்றனர்.

மேற்கூறிய 6-ஆம் வசனம் அதனையே விளக்குகிறது.



## 3. ஜின், ஷைத்தான்களிடம் காவல் தேடலாமா?

ஜின் இனத்தவர்களிடம் மனிதர்கள் பாதுகாப்புத் தேடுதல் என்பது முன்னர் கூறப்பட்ட ஒரு வகையில் மட்டுமின்றி இன்னும் பல வகைகள் உள்ளன. சிலவற்றை இங்கு காண்போம்.

1. ஒருவருக்கு நோய் ஏற்பட்டால், அது ஜின், ஷைத்தான், பேய்களின் கெட்ட பார்வையால் ஏற்பட்டு விட்டதாக நினைத்துக் கொண்டு, அதை நீக்கிட உயர்தரமான உணவுகளை சமைத்து, அத்துடன் பலவகையான மணப் பொருள்களையும் சேர்த்து எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போய்,

குறிப்பிட்ட தேவதைகளின் சிலையருகில் வைத்து பூஜை செய்து படைப்பார்கள். குறிப்பிட்ட தேவதை அங்கு வருகை தந்து, அதனை ஏற்றுக் கொண்டு விட்டால் நோய் குணமாகி விடுமென்றும், இல்லையென்றால் நோய் குணமடையாது என்றும் அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. இவ்வழக்கம் அக்கால அரபியர்களிடம் இருந்து வந்தது.

இப்பொழுது கூட, இந்தியாவில் உள்ள பாமர மக்கள் உணவுகளையும், சில பொருள்களையும் எடுத்துக் கொண்டு போய் கோவில்கள் முன்னிலையிலோ, சமாதிகளின் முன்னிலையிலோ அல்லது குறிப்பிட்ட ஒரு மரத்தின் கீழோ வைத்து தேவதை, ஜின் (பூதம்) பெயரால் 'கழிப்பு' செய்கின்றனர். இச்சடங்குகளை முறைப்படி செய்வதற்கென ஆட்களுமிருக்கின்றனர்.

2. வாழ்க்கையில், தொழிலில் ஏதேனுமொரு சிக்கல் நேர்ந்து விட்டால் ஜின், ஷைத்தான்களின் பெயரில் சில மந்திரங்களை உச்சாடனம் செய்கின்றனர். அதற்குச் சில நிபந்தனைகளும் உள்ளன. அவ்வாறு செய்யப்பட்டால் குறிப்பிட்ட ஷைத்தான்கள் சிக்கலை நீக்கி மகிழ்ச்சியை அளிக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை.

3. ஒரு குறிப்பிட்ட ஷைத்தானின் பெயரை ஆயிரம் முறைகள் உச்சரித்துக் கொண்டே வந்தால் அது வருகை தந்து அல்லது உச்சரிப்பவன் மேல் வந்து பல செய்திகளைக் கூறுவதாகவும் நம்புகின்றனர்.

(இதே போன்றுதான் முஸ்லிம்களிலுள்ள சில அறிவிலிகள் குறிப்பிட்ட வலியுல்லாஹ்வின் பெயரைக் கொண்டு திக்ர் செய்தால் அவ்வலியுல்லாஹ் அந்த ஆணின் மீதோ பெண்ணின் மீதோ இறங்கிச் சில செய்திகளைக் கூறுவதாகக் கூறுகின்றனர். இந்த நம்பிக்கை ஈமானையே அசைத்து விடுவதுடன், அந்த இறைநேசர்களையும் இழிவுபடுத்தும் செயலாகவும் ஆகிவிடுகின்றது.

வலிமார்கள் எவர் மீதும் 'வந்து' எவரையும் பேயாடச் செய்வது கிடையாது. இவையெல்லாம் தவறான, ஜாஹிலிய்யத்தான நம்பிக்கையாகும்.)

4. எவருக்கேனும் வருங்காலத்தில் என்ன நிகழப் போகிறது என்பது தெரிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் குறிகாரர், ஜோதிடரிடம் சென்று இதைப் பற்றிக் கூறுவர். அவர் சில தேவதைகள், ஜின்களின் பெயர்களை உச்சாடனம் செய்வார். ஆடு, கோழி போன்ற பிராணிகளைத் தேவதையின் பெயரால் அறுத்துப் பலியிடுவார்.

சில சமயங்களில் இரத்த அபிஷேகமும் செய்வர். உடனேயே சாமிகளும், தேவதைகளும் அவர்கள் மேல் ஆஜராகி வருங்கால விஷயங்களை உரைத்து விடுவதாகக் கூறிக் கொள்கின்றனர். இதில் எத்தனையோ தந்திரங்கள் இருக்கின்றன அவற்றிலேயே மதி மயங்கித் திரிவோரும் இருக்கின்றனர்.

(நம்மவர்களில் சிலர், ஜின்களை வசப்படுத்தி அவற்றின் மூலம் நம்மவர்களில் ஏமாந்த சோணகிரிகளின் பணத்தைப் பிடுங்க, அந்த அப்பாவிகளிடம், 'ஆடு, கோழி கொண்டு வா' என்றெல்லாம் பொய்யுரைத்துப் பைகளைக் காலியாக்கிக் கொண்டிருக்கின்றனர்.)



இஸ்லாத்தில் சூனியம் என்பதே பெரும் பாவங்களில் ஒன்றாகும்.

இவற்றையெல்லாம் நம் சத்திய இஸ்லாம் மிக வன்மையாகக் கண்டித்துக் கூறியிருப்பதுடன், இவ்வாறு நம்பித் திரிபவர்களை அல்லாஹு தஆலாவின் மீது நம்பிக்கை இழந்தவர்கள் எனவும் வர்ணிக்கின்றது.

'அல்லாஹ்விடமே அனைத்திற்கும் பாதுகாப்புத் தேடுங்கள்! அவனுக்கே நேர்ச்சை செய்யுங்கள்! உடல் வணக்கமோ, பொருள் வணக்கமோ எதுவாயினும் அவனுக்காகவே செய்யுங்கள். அவனுடைய கட்டளையின்றி எதுவும் நடைபெறாது' என நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

*- அல்ஹதீஸ்*

எனவே மேற்கண்ட முறைகளிலெல்லாம் ஜின் இனத்தவர்களிடம் மனித இனத்தவர் பாதுகாப்புத் தேடி வந்ததால் ஜின்களுக்கு மமதையும், ஆணவமும் ஏற்பட்டு, தங்களை உயர்வானவர்களாகக் கருத ஆரம்பித்துவிட்டனர் என்று கருத்துக்கள் இங்குக் கொள்ளப்படுகின்றன. அல்லாஹ் மறுமையில் எவரையும் உயிர் கொடுத்து எழுப்ப மாட்டான் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தது போலவே ஜின்களும் எண்ணிக் கொண்டிருந்தனர்.

மனிதனோ, ஜின்னோ எவராயினும் மரித்த பின்னர் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவதில்லை என்றும், மரித்தவரின் ஆன்மாக்கள் இவ்வுலகிலேயே சுற்றித் திரிகின்றன என்றும், எப்பொழுதும் இதே நிலையிலேயே நீடித்திருக்கும் என்றும் சன்மார்க்கத்தை நிராகரிப்போர் நினைப்பது போன்றே ஜின்களும் நினைத்து வந்தனர்.

இத்தகைய எண்ணம் தவறென்பதையும், மறுமை நாள் உண்டென்றும், அந்நாளில் யாவரும் உயிர் கொடுக்கப்பட்டு

எழுப்பப்படுவர் என்றும் ஜின்கள் உணர்ந்து கொண்டதை ஏழாம் வசனம் குறிப்பிடுகின்றது.

திருக்குர்ஆன் இறக்கப்படுவதற்கு முன்னர் ஜின்கள் நான்காம் வானம் வரைச் சென்று அங்கு பேசப்படும் விஷயங்களில் சிலவற்றைத் திருட்டுத்தனமாக செவியேற்று ஒவ்வொரு விஷயத்துடனும் ஒன்பது பொய்களைக் கலந்து தங்களை நம்பிக் கொண்டிருக்கும் ஜோதிடர்களுக்குக் கூறிவிடுவர்.

திருக் குர்ஆன் இறங்க ஆரம்பித்த பின்னர் ஜின்களை உயரே ஏறவிடாதவாறு தடுத்து விட காவலாளிகளாக மலக்குகள் நியமிக்கப்பட்டு விட்டனர். இதன் பின்னர் ஜின்களில் எவரேனும் ஏற நினைத்தால் நாலா பக்கங்களிலிருந்தும் மலக்குகள் நெருப்புப் பந்தங்களை அவர்கள் மீது எறிந்து துரத்தியடிக்க ஆரம்பித்தனர்.

இந்நிகழ்ச்சியையே 8 முதல் 10 முடியவுள்ள வசனங்கள் விளக்குகின்றன. நபி (ஸல்) அவர்கள் மூலம் திருக் குர்ஆனைச் செவியேற்பதற்கு முன்னர் ஜின்களுக்கு நேர்ந்த கதியையே இவ்வசனங்கள் கூறுகின்றன.

ஜின்களுக்கு இக்கதி எதனால் ஏற்பட்டது என்பது பற்றியும், அதனைத் தெரிந்து கொள்ள அவர்கள் நாலா பக்கங்களிலும் சுற்றித் திரிந்தது பற்றியும், பின்னர் ஏற்பட்ட முடிவுகளும், இவ்வத்தியாயம் இறக்கப்பெற்ற வரலாற்றுரையில் விளக்கப்பட்டிருக்கின்றன.

பூமியில் இருப்பவர்கள் மீது தீங்கு நாடப்பட்டிருக்கிறதா? அல்லது அவர்களின் விஷயத்தில் அவர்களின் இரட்சகன் நன்மை நாடியிருக்கிறானா?

'முன்னர் கூறப்பட்ட பிரகாரம் வானில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதைக் கவனிக்கும் பொழுது இப்பூமியில் வாழ்வோர் மீது ஏதேனும் பேராபத்துத்தான் நிகழப் போகிறதா?'



'அல்லது இதன் மூலம் நன்மைதான் பிறக்கப் போகிறதாவென்பது தெரியவில்லையே?' என ஜின்கள் ஐயுறுவதை இவ்வசனம் குறிப்பிடுகிறது.

பின்னர் திருக்குர்ஆனைச் செவியுற்றதும் அவர்களின் சந்தேகம் அகலுகிறது. திருக் குர்ஆனின் பாதுகாப்பிற்காகவே இத்தகைய காவல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும், இதன் மூலம் உலகத்தவர்களுக்கு நன்மையே பிறக்கப் போகிறது என்றும் ஜின்கள் தெளிவு பெற்று விடுகின்றனர்.

11, 12 - ம் திருவசனங்களுக்குரிய விளக்கம் :

ஜின் இனமாகிய நாம் பலமிக்கவர்களாயினும், மனித இனத்திலுள்ளவர்களில் ஒன்றுமறியா பாமர மக்களை நாம் அடக்கியாண்ட போதிலும், அல்லாஹு" தஆலாவின் முன்னிலையில் நாம் அடங்கி விட வேண்டியவர்களேதாம்.

எங்களின் பலத்தால் அவனை (அல்லாஹ்வை) எதுவும் செய்து விட முடியாது. அல்லது எங்கள் மீது அவன் நடவடிக்கை எடுக்க நாடினால் அதிலிருந்து தப்பி ஓடி எங்கும் ஒளிந்து கொள்ளவும் முடியாது.

பொதுவாக அல்லாஹு" தஆலாவை இயலாதவனாக ஆக்குவதென்பது எவராலும் முடியக் கூடியதன்று என்பதை நன்றாக உணர்ந்து கொண்டோம்.

வானின் இரகசியங்களை நாம் தெரிந்து கொள்ள முடியாதவாறு தடுக்கப்பட்டு விட்டோம். எம் பலத்தைப் பயன்படுத்தி மேலேறிச் செல்ல நினைத்தால் நெருப்புப் பந்தங்களால் துரத்தியடிக்கப்படுகிறோம். இறைவனின் வேதனை எங்கள் மீது இறங்க ஆரம்பித்து விட்டால் எங்கேயேனும் ஓடி ஒளிந்து கொள்ளவோ அல்லது எவருடைய பாதுகாப்பிலேனும் அடைக்கலம் புகுந்து கொள்ளவோ முடியாது.

ஆகையினால் இறுதி நபியையும், அவர்கள் மூலம் வந்துள்ள வேதத்தையும் நாம் விசுவாசிக்கின்றோம் என்று இவ்வசனத்திற்குக் கருத்து கூறப்படுகின்றது.

13-ம் வசனத்தின் விளக்கம் : இரு உலகிலும் எத்தகைய இழப்பு பற்றிய அச்சமோ, அல்லாஹுத் தஆலா தண்டித்து விடுவானோ என்ற அச்சமோ அவருக்கு இருக்காது.

அல்லாஹுத் தஆலாவின் கட்டளைக்குக் கட்டுப்பட்டோரும், கட்டுப்படாமல் அநியாயம் செய்து கொண்டிருப்போரும் நம்மில் இருக்கின்றனர். இரு சாராரும் எவ்வகையிலும் சம தகுதியை (அந்தஸ்தை)ப் பெறமாட்டார்கள். அல்லாஹுத் தஆலாவின் கட்டளைக்கு வழிபட்டு நடப்போரே நேர்மையான வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவராவர்.

அல்லாஹுத் தஆலாவின் கட்டளையைப் புறக்கணித்து நடப்போர் நரகத்திற்கு எரிகட்டைகளாக ஆகின்றனர் என்ற கருத்துக்களை 13, 14, 15 -ம் வசனங்கள் குறிப்பிடுகின்றன.

இவ்வத்தியாயத்தின் ஆரம்ப வசனம் முதல் 15 முடியவுள்ள வசனங்களில் ஜின் இனத்தவரின் நிலை பற்றியும், அவர்கள் தங்கள் நிலைகள் பற்றி ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டது பற்றியும் விளக்கப்பட்டிருக்கின்றன.

## 4. ஜின் இனத்தார் ஈமான் கொண்ட நிகழ்ச்சி!

'மேலும் (நபியே!) இந்தக் குர்ஆனை செவியுறுவதற்காக 'ஜின்'களிலிருந்து சிலரை உம்மிடம் நாம் திருப்பிய சமயம் அவர்கள் (அதனை) ஓதுமிடத்திற்கு ஆஜரானபோது, 'மௌனமாக இருங்கள்' என்று கூறினர். பின்னர் அது முடிவுற்றபொழுது தங்கள் கூட்டத்தார்பால் எச்சரிக்கின்றவர் களாகத் திரும்பிச் சென்றனர்.'

(46:29)

'(தங்கள் கூட்டத்தாரை நோக்கி,) 'எங்கள் சமூகத்தவரே! திட்டமாக நாம் ஒரு வேதத்தைச்



செவியுற்றோம். அது தனக்கு முன்னருள்ள (வேதத்)தை உண்மையாக்கும் நிலையில் மூஸாவுக்குப் பின்னர் இறக்கப்பட்டிருக்கின்றது. அது சத்தியத்தின்பாலும், நேரான வழியின்பாலும் (யாவருக்கும்) வழிகாட்டுகின்றது.'

(46:30)

'எங்கள் சமூகத்தவர்களே! அல்லாஹ்வின் அழைப்பாளருக்கு பதிலளித்து (அவரை) விசுவாசமும் கொள்ளுங்கள். உங்களுக்கு உங்களுடைய பாவங்களிலிருந்து அவன் மன்னித்து நோவு அளிக்கும் வேதனையிலிருந்து உங்களைக் காப்பாற்றுவான்.'

(46:31)

'மேலும், எவர் அல்லாஹ்வின் அழைப்பாளருக்கு பதிலளிக்கவில்லையோ பூமியில் (வேதனையை இறக்குவதை விட்டு அல்லாஹ்வை) அவர் தடுக்க கூடியவரல்லர். இன்னும் அவருக்கு அ(வ்விறை) வனைத் தவிர பாதுகாவலர் இல்லை. இத்தகையோர் பகிரங்க வழிகேட்டில் இருக்கின்றனர் என்று கூறினர்.'

(46:32)

### ஸூரத்துல் அஹ்காஃப்

வானில் மலக்குகள் தங்களுக்குள் பேசிக் கொள்வதை ஷைத்தான்கள் மறைந்திருந்து கேட்பது வழக்கம். திருநபி (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் வந்ததிலிருந்து ஷைத்தான்கள் விண்ணுலகம் செல்லவிடாமல் தடுக்கப்பட்டனர். அங்குச் செல்லும் ஷைத்தான்கள் நெருப்புப் பந்தங்களால் துரத்தப்பட்டனர்.

இத்தனை காலமாக இல்லாமல் இப்பொழுது இத்தடை ஏற்பட்டதற்கு காரணம் என்னவென்பதை அறிய வேண்டுமென அவர்கள் தங்களுக்குள் கலந்தாலோசனை செய்தனர்.

இந்நிலையில் பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்கள் சிலருடன் 'உக்காழ்' சந்தைக்குச் சென்று பேரீத்தம் தோட்டத்தில் பஜ்ரு தொழுகையின் போது திருக்குர்ஆனை இரைந்து ஓதிக் கொண்டிருந்தார்கள். இதனை ஜின் இனத்தைச் சேர்ந்த சிலர் மௌனமாக இருந்து செவியேற்றனர். பின்னர் அந்த ஜின்கள் அங்கிருந்து அகன்று சென்று தங்கள் இனத்தைச் சேர்ந்த மற்றவர்களிடம் இவ்விஷயத்தைக் கூறி சன் மார்க்கத்தைத் தழுவுமாறு அவர்களைத் தூண்டினர்.

இதுபற்றிய விபரம் புஹாரீ, முஸ்லிம் ஆகிய நூற்களிலும் கூறப்பட்டிருக்கிறது.

நபி மூஸா (அலை) அவர்களுக்கு அருளப்பட்டிருந்த தவ்ராத் வேதம் பற்றித்தான் ஜின்கள் அறிந்திருந்தன. அது பற்றிய ஹதீஸ் :

'ஈஸா நபியின் வேதமான இன்ஜீல் பற்றி ஜின்கள் குறிப்பிடாமல் மூஸா நபியைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளன. ஈஸா நபியைப் பற்றி அந்த ஜின்கள் கேள்விப்பட்டதில்லை. மேலும் தவ்ராத் வேதம்தான் வேதக்காரர்களுக்கு மத்தியில் அப்போது அதிகமாக பிரபலமடைந்திருந்தது.'

*- இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் கருத்துரை*

## 5. பர்தாவில் ஜின்

'வல் ஜின்னு தஹ்தி.'.புவல், அன்வாறு ஸாத்தி அத்துன்.

வல்ஹக்கு யலுஹருமிம் ம.'.னன் வமின் கலிமி.'

பொருள் : இன்னும், ஜின்கள் (என்னும் பூத வர்க்கம்) (பேய்க்) கூச்சலிட்டன. (திக்குத் திகந்தமெங்கனும்) ஒளிக்கற்றைகள் உமிழ்ந்தன.

நபி (ஸல்) அவர்களின் பிறப்பால் மலைகளிலும்,



மடுக்களிலும் உயிர் வாழும் ஜின்கள் பீதியடைந்து வீறிட்டு அலறின. அன்றி, அண்ணல் நபிகளார் பிறந்த பொழுது அவர்களுடன் ஒரு பேரொளியும் சேர்ந்து பிறந்தது. அவ்வொளியின் ஆதிக்கத்தில் அகிலமே தெரிந்தது.

இங்கே, 'ஜின்கள் கூச்சலிட்டன' என்பதன் மூலம் சமுதாயத்தில் வேரூன்றிப் போயிருந்த அறியாமையும், மூடத்தனங்களும் வேர்பிடுங்க ஆரம்பித்தன என்பதையும், 'தினந்தோறும் ஜோதி மின்ன' என்பதன் மூலம் வேர் பிடுங்கத் தொடங்கிய அறியாமை என்னும் இருளும், மூடநம்பிக்கை என்னும் மூட்டமும், அங்கிங்கெனாதபடி எங்கும் இல்லாமல் அழிந்தொழிந்தது என்பதையும்,

'மண்ணும் உண்மை நெஞ்சறிவால் வாயுறையால் தோன்றியதே' என்பதன் மூலம் 'அறிவாற்றல்' என்ற ஞான சூரியன் உதயத்தாலும், வாய்மை என்ற பூரணச் சந்திரனின் வருகையாலும், (அதாவது நபிகளாரின் அறிவாற்றலை சூரியனுக்கும், வாய்மையை பூரணச் சந்திரனுக்கும் ஒப்பிடுகிறார்.)

'இஸ்லாமியம் என்னும் பகலை மனித சமுதாயம் என்னும் உலகம் பெற்றுச் சிறந்தது - என்ற தத்துவ விளக்கத்தை எண்பித்து காட்டுகின்றார். ஸுப்ஹானல்லாஹ்! என்ன ஆழ்ந்த கருத்து பார்த்தீர்களா?

இதோ மரைக்காயரின் தத்துவக் கவிதை :

'ஜின் இனங்கள் கூச்சலிடத் திசைதோறும் ஜோதி மின்ன

மன்னும் உண்மை நெஞ்சறிவால் வாயுரையால் தோன்றியதே!'

நான் ஏற்கனவே கூறியது போன்று ஜின்கள் பல்வேறு உருவங்களை எடுக்கும் ஆற்றல் பெற்றவையாகும்.

உதாரணமாக : மனித உருவெடுத்தால் மனித இயல்புகளான மொழியும் சக்தியும் சிந்திக்கும் ஆற்றலும் (மனித

உருவை அவை மாற்றிக் கொள்ளும் வரை) அந்த ஜின்களிடம் வெளிப்படும்.

யானை உருவெடுத்தால் பிளிரும் இயல்பு வெளிப்படும். கருநாகத்தின் உருவெடுத்தால் படமெடுத்தாடும் இயல்பும், எதிரியைத் தீண்டும்போது நஞ்சைப் பாய்ச்சும் இயல்பும் வெளிப்படும்.

## ஜோதிடக் கலை வளர்ந்த முறை

அந்த ஜின்னுக்கு விண்ணகம், மண்ணகம் ஆகிய இரண்டு மண்டலங்களிலும் சஞ்சரிக்கக் கூடிய வலிமையையும் வல்லவன் அல்லாஹ் வழங்கியுள்ளான். ஆகவே நினைத்த நேரத்தில் விண்ணகத்திலிருந்து மண்ணகத்திற்கும், மண்ணகத்திலிருந்து விண்ணகத்திற்கும் சென்று வர முடியும்.

## ஹயாத்துல் ஹயவான்

ஜின்களின் இயல்புகள் இவ்வாறிருக்க அன்றாட நிர்வாகங்களை கவனிப்பதற்கென்று வானவர்களில் ஒரு பகுதியினரை அல்லாஹ் நியமித்துள்ளான். அவ்வானவர்கள் விண்ணகத்தில் ஒருவருக்கொருவர் தங்களின் பொறுப்புக்களைப் பரிமாறிக் கொள்வர்.

'இன்று இன்னானின் மகன் இன்னானுக்கு இன்ன வகை உணவை இன்ன வகை தொழிலின் மூலம் கிடைக்கச் செய்ய பணிக்கப்பட்டுள்ளேன்' என்றும்,

'இன்று இன்னானின் மனைவியாகிய இன்னவளின் கருப்பையில் இன்ன பாலுடைய (ஆண் அல்லது பெண்) குழந்தை பிறக்கச் செய்ய பணிக்கப்பட்டுள்ளேன்' என்றும்,

'இன்னான் இன்ன வகையில் விபத்திற்குள்ளாகி திடீர் மரணம் அடைவான் என்றிருந்ததை இன்ன அறச் செயல் (தர்மம்) செய்யுமாறு செய்து, அதன் விளைவாக அவனுக்கு



நிகழவிருந்த விபத்திலிருந்து அவனைப் பாதுகாத்து அவனுடைய ஆயுளை நீட்டித்துக் கொடுக்கும்படி பணிக்கப் பட்டுள்ளேன்' என்றெல்லாம் விண்ணகத்தில் அன்றாட நிர்வாகப் பொறுப்புகளைக் கொடுக்கப்பட்டுள்ள வானவர்களான மலக்குகள் அன்றாட நிர்வாகங்களைப் பற்றி ஒருவருக் கொருவர் பறிமாறிக் கொள்வதனை விண்ணகம் செல்லவும், வரவுமான வலிமை பெற்ற ஜின்கள் ஒட்டுக்கேட்டு, அவ்வாறு (தாங்கள்) ஒட்டுக் கேட்டவற்றை மண்ணகத்தில் வாழும் மக்களிடம் அதாவது எந்த மனிதனிடம் எந்த ஜின் வசப்பட்டு, (வாஸிலாவாகி) உள்ளதோ அந்த மனிதனிடம் எற்றி வைத்துவிடும்.

ஜின்களின் மூலம் மனிதர்களின் தினப் பலன்களை தெரிந்து கொண்ட அந்த ஜின்னின் வாஸிலாக்காரன், அந்த தினப்பலன்களுக்கு கண், காது, மூக்கு வைத்து (கற்பித்து) ஜோடனையாக மனித சமுதாயத்திற்கு எற்றி வைப்பான். இப்படித்தான் ஜோதிடக் கலை வளர்ந்தது.

அன்றி, வாராந்திர நிர்வாகங்களுக்கென்றும், வருடாந்திர நிர்வாகங்களுக்கென்றும் இறைவன் குறிப்பிட்ட மலக்குகளை நியமனம் செய்துள்ளான்.

இவ்வாறு மாத, வருட நிர்வாகப் பொறுப்புகளைக் கொடுக்கப்பட்டுள்ள அந்தந்த மலக்குகள் தங்களிடையே மேற்கண்டவாறு தங்களுக்குள் நிர்வாக நியதிகளைப் பரிமாறிக் கொள்கின்றனர்.

ஆகவே, விண்ணகம் சென்று வருவதற்குரிய வல்லமை கொடுக்கப்பட்டுள்ள ஜின்கள் இவ்வகையான உரையாடல் களையும் ஒட்டுக் கேட்டு உலகில் பரப்பினர். அதிலிருந்தே வார, மாத, வருடப் பலன்கள் உருவாயின.

இதிலொரு விந்தை என்னவென்றால் ஜோதிடம் கூறி, அதன் மூலம் சொகுசு வாழ்வு பெற்றுத் திகழ்ந்த (திகழும்)

ஜோதிடர்கள் தங்களின் ஜோதிடத் தொழிலுக்கு முதுகெலும் பாகத் திகழும் ஜின்களை 'தேவதைகள்' என்றும், 'தெய்வப் பிறவிகள்' என்றும் வர்ணனைச் செய்து ஜின்களை மகிழ்வித்து வந்தனர்.

ஆதலால், ஜோதிடர்களின் இந்த வர்ணனை வழிப்பாடுகளால் மதிமயக்கமடைந்து கொண்டிருந்த அந்த ஜின்கள் வானவர்களின் உரையாடல்களை ஒட்டுக் கேட்கும் திருட்டுத் தனங்களை மென்மேலும் ஊக்கமுடன் செய்து வந்தன.

இந்நிலையில்தான் நம்முடைய நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறப்பு நிகழ்கின்றது.

பெருமானாரின் பிறப்பின்போது இறைவனின் ஒருமைக்கு வஹ்தானியத்திற்குப் புறம்பான முறைகேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதைப் போன்று, அவ்'வஹ்தானியத்' தின் ஆணி வேரையே ஆட்டம் காணச் செய்திட வல்ல இந்த ஜோதிடக் கலைக்கும் சாவு மணி அடிக்கப்பட்டு விட்டது. ஆம்! விண்ணகத்தில் வானவர்களிடையே நடைபெறும் உரையாடல்களை ஒட்டுக் கேட்கும் ஜின்கள் இனி எப்பொழுதும் ஒட்டுக் கேட்க முடியாதவாறு பெருமானார் (ஸல்) அவர்கள் பிறந்ததிலிருந்து இரும்புத் திரை போடப்பட்டு விட்டது.

ருசி கண்ட பூனை உரியைச் சுற்றிச் சுற்றி வருவதைப் போன்று ஒட்டுக் கேட்பதற்காகவே விண்ணகத்தைச் சுற்றி வலம் வந்த ஜின்களை மலக்குகள் அடித்து விரட்டினர். மலக்குகளின் அடியின் வேதனையைத் தாங்க முடியாமல் அடிபட்ட ஜின்கள் கூச்சலிட்டுக் கொண்டு அங்குமிங்கும் சிதறி ஓடினர். நபிகளார் அவர்களின் பிறப்பின்போது ஜின்களுக்கு நேர்ந்த இந்த இழிநிலையினைத்தான் நம்முடைய நாயகப் பாவலர் பூஸிரி (ரஹ்) அவர்கள் அறுபத்தைந்தாம் கண்ணியின் முதல் அடியில் 'ஜின் இனங்கள் கூச்சலிட' எனக் கூறிக் காண்பிக்கின்றார்கள். விண்ணுலகம் சென்று மலக்குகளின் உரையாடல்களை ஒட்டுக்



கேட்க முடியாதவாறு முடக்கப்பட்ட ஜின்கள், 'இனி விண்ணகத்துக்குச் செய்திகளைச் சேகரிக்க முடியாது. ஆகவே இதுவரையும் கடைப்பிடித்து வந்த கோணல் மதத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதுதான்' என்று தங்களை பூஜித்து வந்த ஜோதிடர்களிடம் கூறி, அந்த ஜோதிடர்களும் தங்களை அணுகும் ஜோதிடப் பிரியர்களிடம் அங்ஙனமே கூறி,

'நாம் இதுவரை நம்பி ஏமாந்து வந்த ஜோதிடக் கலையும், பல தெய்வ வணக்க வழிபாடுகளும் பொய்யான - கோணல் வழியானவை. ஆகவே, இனி அவற்றை நாம் விட்டுத் தொலைத்து விட்டு, சத்தியமார்க்கத்தைப் பின்பற்ற வேண்டியதுதான் முறை' என்று உண்மை நிலையினை எடுத்துக் கூறிய பின்னும், அவர்கள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ள முன்வரவில்லை என 67-ம் கண்ணியில் இமாம் அவர்கள் சுட்டிக் காண்பிக்கின்றார்கள்.

இதோ அந்த 67-ம் கண்ணி :

'மிம்ப.'.திமா அக்பரல் அக்வாம காஹினுஹு"ம் பிஅன்ன தீனஹு"முல் மு.'.வஜ்ஜலம் யக்குமி -

'அவர் (பாரஸீகர்)களின் ஜோதிடர்கள்,

'(தம்மின்) கோணல் மதம் இனி நிலை கொள்ளாது என அவர்களுக்கு அறிவுறுத்திய பின்னும்'

என்னும் இக்கண்ணியே இமாம் அவர்கள் குறிப்பிடும் செய்தியாகும்.

## 6. ஜின்களிலிருந்து பாதுகாப்புப் பெற

ஸைத் இப்னு ஸாபித் (ரலி) குறித்து இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. ஒருநாள் அவர் தம் தோட்டத்திற்குச் சென்றிருந்தார். அங்கு திடீரென்று சப்தம் கேட்டது. 'இது என்ன?' என்று அவர் கேட்டபோது, ஒரு ஜின், 'எங்களுக்கு பஞ்சம்

ஏற்பட்டிருக்கிறது. உங்கள் தோட்டத்துக் கனிகளிலிருந்து எங்களுக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொள்ள விரும்புகிறோம். உங்களுக்குச் சம்மதமா?' என்று கேட்டது.

'ஆம்! சம்மதம்தான்' என்று பதிலளித்தார் ஸைத். 'உங்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான ஆயத்து எது எனக் கூறுங்கள்!' எனக் கேட்டார்கள்.

ஜின் பதிலளித்தது : 'எங்களிடமிருந்து ஒருவனைப் பாதுகாக்கக் கூடியது 'ஆயத்துல் குர்ஸீ.'

இப்னு கஅப் (ரலி) வின் வீட்டில் தானியக் குதிர் ஒன்று இருந்தது. அதை தினந்தோறும் கண்காணித்து வருவது அவர் வழக்கம். ஒரு நாள் தானியம் சிறிது குறைந்திருந்தது. இரவு நேரத்தில் அதனைக் காவல் காத்துக் கொண்டிருந்தபோது இளைஞனைப் போன்ற மிருகம் ஒன்றைக் கண்டார். அதற்கு அவர் ஸலாம் சொன்னபோது, அது அவருக்குப் பதிலளித்தது.

'நீ ஜின்னா, மனிதனா? என்று கேட்டார். 'ஜின்' என்றது அது. அதன் கையைக் காட்டுமாறு அவர் கேட்டபோது அது கையை விரித்துக் காட்டிற்று.

அதில் நாயின் முன்னங்கால்களைப் போன்று ரோமம் அடர்ந்து காணப்பட்டது.

'ஜின்னின் அமைப்பு இதுத்தானா?' என்று இப்னு கஅப் (ரலி) கேட்டார். 'அவர்களிலேயே மிகவும் சக்தி படைத்தவன் நான்' என்று பதில் வந்தது. 'நீ ஏன் இந்த காரியத்தைச் செய்கிறாய்?' என்று இப்னு கஅப் (ரலி) கேட்டார். இப்னு கஅப் (ரலி) தர்ம எண்ணம் படைத்தவர் என்று தான் அறிந்திருந்ததால் அவரடமிருந்தே தனக்கு தேவையானதை எடுத்துக் கொள்ள நினைத்ததாக அது சொன்னது.

'உங்களிடமிருந்து எங்களைப் பாதுகாக்கக் கூடியது எது?' என்று இப்னு கஅப் (ரலி) கேட்டார்கள். ஜின் கூறிற்று, 'அது ஆயத்துல் குர்ஸீ ஆயத்தாகும்.'



'ஒருவன் அதை காலையில் ஓதினால் மாலை வரை காக்கப்படுவான்!' என்று மேலும் கூறிற்று.

இந்த விவரத்தை இப்னு கஅப் (ரலி) பெருமானாரிடம் கூறியபோது அவர்கள் சொன்னார்கள், 'அது உண்மையை உமக்குத் தெரிவித்திருக்கிறது.'

மரத்தடி வந்த ஒருவர் அந்த மரம் அசைவதைக் கண்டு, 'யாரது?' என்று கேட்டார். பதில் வரவில்லை. அவர் ஆயத்துல் குர்ஸீயை ஓதினார். அப்போது அந்த ஈச்சமரத்திலிருந்து ஷைத்தான் ஒன்று கீழே இறங்கிற்று.

அவர் 'எங்களிடம் நோயாளி ஒருவன் இருக்கிறான். அவனுக்கு எதை வைத்துப் பரிகாரம் செய்யலாம்' என்று கேட்டார்.

ஷைத்தான் கூறிற்று, "எதை வைத்து என்னைக் கீழே இறக்கினீரோ அதை வைத்தே பரிகாரம் செய்யலாம்."

பெருமானார் (ஸல்) சொன்னதாக அலீ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ரிவாயத்து:

"அலீயே! இந்த ஆயத்தை நீர் ஒரு வீட்டில் ஓதுவீராயின் அந்த வீட்டில் முப்பது நாட்களுக்கு ஷைத்தானை வர விடாமல் விரட்டி விடுவீர், இன்னும் அவ்வீட்டினுள் சூனியக்காரனும், சூனியக்காரியும் நாற்பது இரவுகள் வரை நுழைய மாட்டார்கள். இந்த ஆயத்தை உம் மக்களுக்கும், குடும்பத்தாருக்கும், உம் அண்டை வீட்டாருக்கும் கற்றுக் கொடுப்பீராக! இதனை விடவும் மிக்க மகத்துவமுள்ள ஆயத்து அருளப்படவில்லை" என நபி (ஸல்) அருளியதாக அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ரிவாயத்து:

இந்த ஆயத்துல் குர்ஸீயை ஃபர்ளான தொழுகை ஒவ்வொன்றிற்குப் பிறகும் எவர் ஓதுகின்றாரோ மரணம் ஒன்றைத் தவிர வேறெதுவும் சுவர்க்கம் புகுவதை விட்டும் அவரைத் தடுக்கமாட்டாது. ஸித்தீக், ஆபிது ஆகியவர்களைத் தவிர யாரும் இதனை விடாமல் ஓத மாட்டார்கள்.

ஒருவர் தம்முடைய படுக்கையில் இதனை ஓதுவாராயின் அவரும், அவரின் அயலகத்தாரும் இவ்விதமாக அவரைச் சூழவுள்ள யாவரும் அச்சம் தீர்ந்தவர்களாகி விடுகிறார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று ஹல்ரத் அலீ (ரலி) அறிவிக்கின்றார்கள்.

"ஆயத்துல் குர்ஸீயையும், ஸூரத்துல் பகராவுடைய கடைசி ஆயத்துகளையும் ஓதாமல் தூங்குகிற மனிதர் எவரையும் இஸ்லாத்தில் அறிவுள்ளவர் என்று நான் கருதவில்லை. ஏனெனில், அவை அர்ஷின் கீழேயுள்ள புதையலிலிருந்து உங்கள் நபி (ஸல்) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டனவாகும்" என அலீ (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

*- தப்ஸீர் இப்னு கஸீர்*

## 7. ஷைத்தானும், கிறிஸ்தவரும்

குற்றம் செய்யப்பட்ட கிறிஸ்தவர் ஒருவரை சிறைக்கு அழைத்துச் செல்லப்படும்பொழுது வழியில் ஒருவன் தலையில் புல் கட்டு ஒன்றைச் சுமந்து வந்து கொண்டிருந்தான். அது அவனின் தலையிலிருந்து நழுவி விழுந்து விடும் வண்ணம் தடுமாறலான அவன்,

'லா ஹவ்ல வலாகுவ்வத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அளீம்' என்று கூறினான். அதனைக் கண்ணியப்படுத்தும் வண்ணம் அதனை அந்தக் கிறிஸ்தவரும் கூறினார்.



அது கண்டு வியப்புற்ற சிறை அதிகாரி, "இந்தக் கலிமாவைக் கூறும் நீர் ஏன் இஸ்லாத்தைத் தழுவவில்லை?" என்று வினவினார். அதற்கு சரியான மறுமொழி பகராது, "நான் இதனை வானவர்களிடமிருந்து கற்றுக் கொண்டேன்" என்றார் அந்தக் கிறிஸ்தவர்.

'எவ்வாறு?' என்று சிறை அதிகாரி முன்னை விடப் பன்மடங்கு வியப்புடன் வினவினார்.

அதற்கு அவர் கூறினார்: நான் என் சிறிய தந்தையின் செல்ல மகளை மணந்து கொண்டேன். அதற்கு முன் இருவரை அவள் மணந்திருந்தாள். அவ்விருவருக்கும் மண அறையே மரண அறையாக மாறிவிட்டது. நான் மணமுடித்த முதல் இரவு என் முன் ஜின் வந்து நின்று, 'நீ இங்கு ஏன் வந்தாய்?' என்று அதட்டியது. 'இவள் என் மனைவி' என்று நான் பதிலளித்தேன். அதற்கு அது 'இதற்கு முன் இவளை மணமுடித்த இருவரையும் நான் என்ன செய்தேன் என்பதை நீ அறிவாயா? நல்லது; நான் உன் மீது இரங்கி உனக்கு ஒரு சலுகை செய்கிறேன். இன்று வானுலகம் சென்று வானவர்கள் பேசுவதை ஒற்றுக் கேட்டு வருவது என்னுடைய முறையாகும். நீயும் என்னுடன் வா" என்று கூறியது. அதற்கு நான் இணங்கினேன்.

அடுத்த கணம் அது ஒட்டகம் போன்று உருவெடுத்து என்னையும் தன் முதுகில் ஏற்றி வைத்துக் கொண்டு விண்ணிலே பறந்தது.

விண்ணுலகில் அமரர்கள், 'லா ஹவ்ல வலாகுவ்வத்த இல்லாபில்லாஹ்' என்று ஓதிய ஓசை என் செவிபட்டது. அவ்வளவுதான், அந்த ஜின் மண்ணில் வந்து பொத்தென்று விழுந்தது. நான் அதன் மீது அமர்ந்திருந்ததால் எனக்கு யாதோர் அடியும் படவில்லை. சற்று நேரத்தில் மயக்கம் தெளிந்து எழுந்த அந்த ஜின் என்னை நோக்கி கண்களை மூடிக் கொள்ளுமாறு கூறியது. பின்னர் கண்களைத் திறக்குமாறு கூறியது. அவ்விதமே செய்தேன். என்ன புதுமை! என் வீட்டில்

வாயிலில் நின்று கொண்டிருந்தேன். அடுத்த நாள் இரவு நான் என் மனைவியின் அறைக்குள் செல்லும்முன் அந்த ஜின் சென்று கதவுகளை அடைத்துக் கொண்டது. பின்னால் வந்த நான் நிலைமையை உணர்ந்து கதவின் சாவித் துளையில் வாயை வைத்து,

'லா ஹவ்ல வலாகுவ்வத இல்லாபில்லாஹ்' என்ற ஹவ்கலாவை திரும்பத் திரும்ப ஓதினேன். சற்று நேரத்தில் கதவு படார் என்று திறக்கப்பட்டது. ஜின்தான் கதவைத் திறந்ததோ என்று நான் ஐயுற்றுத் திடுக்குற்றேன். ஆனால் என் முன் என் மனைவி புன்முறுவலுடன் நின்று கொண்டிருந்தாள். உள்ளே எட்டிப் பார்த்தேன் ஜின் எரிந்து சாம்பலாகிக் கிடந்தது.

அப்பொழுது என் மனைவி என்னை நோக்கி, 'நீங்கள் அந்த ஹவ்கலாவை ஓதியதும் விண்ணிலிருந்து ஒரு தீப்பிழம்பு இறங்கி வந்து அந்த ஜின்னை எரித்துச் சாம்பலாக்கி விட்டது' எனக் கூறினாள். இச்செய்தி கலீபா அல்மாமூனின் செவிப் பட்டதும் அந்த கிறிஸ்தவரை அழைத்து வரச் செய்து அவர் அனுபவம் பற்றிய முழு விபரத்தையும் அவர் வாயிலாகவே கேட்டு வியப்புற்று அவரை உடனே விடுதலை செய்யுமாறு பணித்தார்.

முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் காட்டில் தவம் செய்து கொண்டிருக்கும் பொழுது தம்மைத் தாக்க வந்த ஷைத்தான் களை இந்த ஹவ்கலாவை ஓதியே சாம்பலாக்கினர் என்று வரலாறு கூறுகிறது.

## 8. ஜின்னின் சோதனை

பெரியார் அபூபக்கர் அப்துல் ரஜாக் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : 'ஒரு நாள் ஹல்ரத் முஹ்யித்தீன் (ரஹ்) அவர்களின் உறவினர் அபூபக்கர் அப்துர் ரஜாக் (ரஹ்) அவர்களுடன் தொழுது கொண்டிருந்தேன். திடீரென்று ஜின்னால் ஏற்பட்ட ஓர் அதிசயச் செய்தியைக் கூறினார்கள் :



ஒருநாள் இரவு நேரத்தில் 'ஜாமி மன்ஸீ' என்னும் பள்ளியில் தொழுது கொண்டிருந்தேன். அப்பொழுது பிரம்புப் பாய்களிலிருந்து ஏதோ ஒன்று வரும் ஓசை கேட்டது. 'புடையன் பாம்பு' ஒன்று நான் ஸஜ்தா செய்யுமிடத்தில் வந்து நின்று கொண்டு வாயைத் திறந்தது.

அதனை என் கையால் தள்ளிவிட்டு அத்தஹிய்யாத்து ஓதிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அது என் தொடை வழியாக ஏறி கழுத்தில் சுற்றிக் கொண்டது. நான் தொழுகை முடிந்து பின்னர் என் கழுத்தில் பார்த்தபோது பாம்பைக் காணோம்.

பின்னர், மறுநாள் காலை ஜு்முஆ பள்ளிவாசல் அருகிலுள்ள ஒரு பாழடைந்த இடத்திற்கு அருகே சென்று கொண்டிருந்தேன். அங்கு நீண்ட ஓர் உருவம் கண் திறந்தவாறு அசையாமல் கிடந்தது. அதைக் கண்ணுற்றதும் ஜின்னோ என்று எண்ணிக் கொண்டேன். அதே சமயம் அவ்வுருவம் என்னிடம் பேசத் துவங்கியது.

'நேற்று நீங்கள் தொழுது கொண்டிருக்கும்பொழுது உங்கள் கழுத்தில் சுற்றிக் கொண்ட புடையன் பாம்பு நானேதான். உங்களைப் போன்ற துணிச்சலானவரை இதுவரைப் பார்த்ததில்லை. நான் எத்தனையோ அவ்லியாக்களைச் சோதித்திருக்கிறேன். உங்களைப் போன்ற வலிமையான நெஞ்சுறுதி கொண்ட, அச்சம் சிறிதும் இல்லாதவரைக் கண்டதில்லை.

'சிலர் மனதில் துணிவுள்ளவர்களாக இருப்பார்கள், வெளியில் அச்சப்படுவார்கள். வெளியில் அச்சம் கொண்டவர் களாகச் சிலர் இருப்பார்கள். உள்ளே அச்சமற்றவர் களாகவும், துணிவு கொண்டவர்களாகவும் காட்சி தருவர்.

ஆனால் நீங்கள் கல் நெஞ்சம் படைத்தவராக இருக்கிறீர்கள்' என்று கூறிவிட்டு, 'நான் செய்த தவறான சோதனைக்காக உங்களிடம் மன்னிப்புத் தேடிக் கொள்கிறேன்' என்று நடுக்கத்தால் அஞ்சி மன்றாடியது.

அதன் தவறை மன்னித்து அதனை நான் நல்வழியில் சேர்த்து வைத்தேன்.

# 9. ஜின் கற்றுக் கொடுத்த இஸ்மு

'வமை(ன்)யத்தகில்லாஹ யஜ்அல்லஹு மக்ரஜன்'

எவர் அல்லாஹ்வுக்காக அஞ்சி நடக்கின்றாரோ அவருக்கு அவன் (தக்க) ஒரு வழியை உண்டாக்குவான்.'

*(65:2)*

நடுக் கடலில் கப்பல் சென்று கொண்டிருக்கிறது. அப்பொழுது கடலிலிருந்து ஒரு மனிதர் வெளிப்பட்டு அந்தக் கப்பலில் உள்ளவர்களை நோக்கி,

'என்னிடம் ஓர் இஸ்மு உள்ளது. அதனை எவர் ஆயிரம் பொற்காசுகள் தருகிறாரோ அவருக்கு நான் கற்றுக் கொடுப்பேன்' எனக் கூறினார்.

கப்பலில் இருந்தோர் அனைவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். அப்பொழுது அவர்களில் ஒருவர் முன்வந்து, 'நல்லது! நான் ஆயிரம் பொற்காசுகள் தருகிறேன், அதனை எனக்கு கற்றுத் தாரும்' என்றார்.

'சரி! அந்த ஆயிரம் பொற்காசுகளையும் கடலில் வீசி எறியும்' என்றார் வந்தவர். அவ்விதமே செய்தார் அவர். அப்பொழுது அந்த மனிதர் அவருக்கு ஓர் ஆயத்தைச் சொல்லிக் கொடுத்து, 'இதனை வலுவாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளும், நீர் நாடியது நடக்கும்' என்று கூறி விட்டுக் கடலில் மறைந்து விட்டார்.

இதன் பின்னர் அவர் அந்த ஆயத்தை ஓதினார். ஓதினார். ஓதிக்கொண்டே இருந்தார். திடீரெனக் கப்பல் உடைந்து சிதறுண்டது.

நல்ல வேளையாக அவரின் முன் ஒரு பலகைத் துண்டு மிதந்து வர அதில் தொத்திக் கொண்டு அந்த ஆயத்தையே ஓதிக் கொண்டிருந்தார். அப்பலகை உயிர் காக்கும் தெப்பம் போல் அமைந்து அவரை ஒரு தீவில் கொண்டு போய்ச் சேர்த்தது.



கரை இறங்கிய அவர் இறைவனுக்கு நன்றி செலுத்திய வண்ணம் அங்கு எவரேனும் இருக்கின்றனரா என்று அங்குமிங்கும் சுற்றிப்பார்த்தார். ஒருவருமிலர். அப்பொழுது அவருக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவேயில்லை.

எனினும் பேரருளாளனாகிய அல்லாஹ் அந்த ஆயத்தை ஓதியதன் காரணமாகத் தம் உயிரைக் காத்தது போன்று தமக்கு அங்கு ஒரு வழியைக் காட்டுவான் என்று எண்ணிய வண்ணம் அந்த ஆயத்தை திரும்பத் திரும்ப ஓதிக் கொண்டு அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்.

அப்பொழுது அங்கு ஓர் இடத்தில் அழகிய ஆரணங்கு ஒருத்தி வீற்றிருப்பதைக் கண்டு அவளை அணுகி, 'அம்மா! நீ யார்? இங்கே வந்து தன்னந்தனியே வீற்றிருக்க காரணம் யாது?' என்று வினவினார். அதற்கு அவள், 'நான் இன்ன ஊரைச் சேர்ந்தவள். என்னை ஒரு ஜின் தூக்கிக் கொண்டு வந்து இங்கே வைத்து வளர்க்கிறது' என்று கூறினாள். அப்பொழுது ஜின் வரும் அரவம் கேட்கவே அந்தப் பெண் அவரை ஒரு பொதும்பிற்குள் ஒளிந்து கொள்ளுமாறு கூறினாள். அவரும் அவ்வாறே செய்தார்.

பொதும்பிற்குள் புகுந்த அவர் அந்த ஆயத்தை அதிக உணர்ச்சியுடன் திரும்பத் திரும்ப ஓதினார். என்ன வியப்பு! அவளை நோக்கி வந்த அந்த ஜின் திடீரென நெருப்பால் எரிந்து சாம்பலாகியது. இது கண்டு அப்பெண்ணுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அந்த மனிதர் பதுங்கிக் கொண்டிருந்த பொதும்பிற்குள் ஓடோடி வந்து அவரிடம் இந்த நற்செய்தியை எடுத்துரைத்து உவகைக் கூத்தாடினாள்.

பின்னர், அவள் அவரை நோக்கி, 'என்னை அந்த ஜின்னின் கொடும்பிடியிலிருந்து காத்தருளிய உமக்கு நான் நன்றிக் கடன் செய்ய வேண்டாமா?' என்று கூறி அவரை அழைத்துக் கொண்டு மற்றொரு பொதும்பிற்குள் சென்றாள். அங்கு அந்த ஜின் சேர்த்து வைத்திருந்த நவரத்தினங்கள் குவியல் குவியலாக கிடந்தன. அவற்றைத் தங்களால் இயன்ற மட்டும் அவ்விருவரும் அள்ளிக் கொண்டார்கள்.

இப்பொழுது அவர்களின் முன் மற்றொரு பிரச்சனை வந்து நின்றது. எவ்வாறு அத்தீவை விட்டும் நீங்கி ஊர்ப் போய்ச் சேருவது என்பதே அப்பிரச்சனை. அதற்கான ஆயத்து தம்மிடம் இருப்பதை உணர்ந்து அவர் சிறிதேனும் துணுக்குறாது கடலோரம் அமர்ந்து அந்த ஆயத்தை திரும்பத் திரும்ப ஓதிக் கொண்டிருந்தார். சற்று நேரத்தில் அவ்வழியே ஒரு கப்பல் செல்வதைக் கண்டதும் அவர்கள் வெள்ளைத் துணியை கப்பலை நோக்கி வீசிக் காட்டினார்கள்.

மாலுமி அவர்கள் மீது இரங்கி அவர்களை நோக்கிக் கப்பலைச் செலுத்திக் கொண்டு வந்தான். அவர்கள் இருவரும் கப்பலில் ஏறிக் கொண்டு தம் ஊர் சேர்ந்து மணமுடித்து செல்வச் சிறப்புடன் வாழ்ந்தார்கள். அவர்களுக்கு இத்துணைச் சீரும் சிறப்பும் நல்கிய அந்த ஆயத்து இதுதான்.

'வமையத்தகில்லாஹ யஜ்அல்லஹு மக்ரஜன் வயர் ஸுகுஹு மின்ஹைஸுலா யஹ்தஸிபு

*எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்கின்றாரோ அவருக்கு அவன் (தக்க) ஒரு வழியை உண்டாக்குவான்.*

*(65:2)*

*'அ(த்தகைய)வர்களுக்கு அவர்கள் அறியாப் புறத்திலிருந்து அவன் உணவு (வசதி)களை அளிக்கிறான்.'*

*(65:3)*

## 10. மந்திரிப்பது கூடும் என்போரின் ஆதாரம்

நபி (ஸல்) அவர்களிடம் ஜிப்ராஈல் (அலை) அவர்கள் வருகை தந்து, 'முஹம்மதே! நோய்வாய்பட்டு விட்டீர்களா?' என்று வினவினர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'ஆம்!' என்றனர்.

அதற்கு ஜிப்ராஈல் (அலை) அவர்கள், 'பிஸ்மில்லாஹி அர்கீக்க மின்குல்லி ஷையின் யு.:தீக்க - மின்ஷர்ரி குல்லி ந.:ப்ஸின் அவ் அய்னின் ஹாஸியத்தின், அல்லாஹும்ம



யஷ்.:பீக்க பிஸ்மில்லாஹி அர்கீக்க' என்று ஓதிப் பார்த்தார்கள்.

*- அறிவிப்பாளர்கள் : அபூ ஸயீதுல் கத்ரீ (ரலி), முஸ்லிம்*

பொருள் : அல்லாஹ்வின் பெயரால் நான் உமக்கு ஓதிப் பார்க்கிறேன். உமக்குத் தீங்களிக்கக் கூடியவற்றை விட்டும், பொறாமைப்படும் ஒவ்வொரு மனிதனின் தீங்கை விட்டும், ஒவ்வொரு கண்ணேறுவின் தீங்கை விட்டும் அல்லாஹ் உமக்கு நலன் அளிப்பானாக. அல்லாஹ்வின் பெயரால் ஓதிப் பார்க்கிறேன்.

மேலும்,

'அல்லாஹும்ம ரப்பன்னாஸ் அத்ஹிபில்ப.:ஸ வஷ்.:பிஹி அன்தஷ்ஷா.:பி லாஷிபாஅ இல்லா ஷி.:பாஉக ஷிபாஅன், லாயுகாதிரு ஸகமா' என்று நபி (ஸல்) அவர்கள் தம் குடும்பத்தாரில் சிலருக்கு ஓதிப் பார்த்து வலக் கையால் தடவுவார்கள்.

*- அறிவிப்பாளர் : உம்முல் மு.:மினீன் ஆயிஷா (ரலி), நூல்:புஹாரி*

பொருள்: யா அல்லாஹ்! (உலக) மக்களைப் படைத்துப் பரிபாலிப்பவனே! இந்த துன்பத்தை நீக்கிவிடு! நீயே நோயைக் குணப்படுத்துபவன். (எனவே) இவருக்கு குணமளித்து விடு! (எங்களுக்கு) உன் நிவாரணத்தைத் தவிர வேறு நிவாரணமில்லை. எந்த ஒரு வேதனையையும், நோயையும் விட்டு விடாது முழு நிவாரணம் அளிப்பாயாக!

மேலும், நபி (ஸல்) அவர்கள் தம் மரண நோயின்போது, 'குல்அவூது பிரப்பில் பலக், குர்அவூது பிரப்பின்னாஸ்' ஆகிய ஸூராக்களைத் தம் மீது ஓதி ஊதிக் கொள்வார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு (தாமே ஓதிக் கொள்ள இயலாமல்) துன்பம் ஏற்பட்டபோது நான் அந்த ஸூராக்களை அவர்களுக்காக (கையில்) ஓதி ஊதுவேன். பரக்கத்திற்காக அவர்களின் கைகளைப் பிடித்து அவர்களின் கைகளாலேயே தடவுவேன்.

*- அறிவிப்பவர்கள் : ஆயிஷா (ரலி), நூல்:புஹாரி*

'தேள் கடிக்கு ஸூரத்துல் ஃபாத்திஹாவைக் கொண்டு ஓதிப் பார்த்து கடிபட்ட இடத்தில் உமிழ நபி (ஸல்) அவர்கள் அனுமதித்துள்ளனர்.'

*அறிவிப்பவர்கள் : அபூ ஸயீதுல் குத்ரீ (ரலி), நூற்கள்: புஹாரி, முஸ்லிம்*

அம்ரு இப்னு ஹஸ்மு உடைய கிளையார் வந்து, 'தாங்கள் ஓதிப் பார்ப்பதை தடைச் செய்துள்ளீர்கள். ஆனால் எங்களிடம் தேள் கடிக்கு ஓதிப் பார்க்கும் மந்திரம் உள்ளது' என்று கூறி அதை நபி (ஸல்) அவர்களிடம் ஓதிக் காண்பித்தார்கள்.

அப்பொழுது நபி (ஸல்) அவர்கள், 'இதில் குற்றம் குறை இருப்பதாக நான் கருதவில்லை. எனவே (ஆகுமான முறையில்) உங்கள் சகோதரருக்கு உதவ முடிந்தால் அவர் உதவட்டும்' எனக் கூறினார்கள்.

*- அறிவிப்பவர்கள் : ஜாபிர் (ரலி), நூல்: முஸ்லிம்*

'நாங்கள் 'அய்யாமுல் ஜாஹிலிய்யா' என்னும் அறியாமை காலத்தில் (சில சொற்களைக் கூறி) ஓதிப் பார்த்துக் கொண்டிருந்தோம். அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்' என்று நபி (ஸல்) அவர்களிடம் வினவினோம். 'எனக்கு அவற்றை ஓதிக் காட்டுங்கள், இறைவனுக்கு இணைவைத்தல் (போன்ற பாவமான சொற்கள், மார்க்கத்திற்கு ஆகாத சொற்கள்) இல்லாதவரை குற்றமில்லை' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர்கள் : அவ்ஃப் இப்னு மாலிக் (ரலி) நூல் : முஸ்லிம்*

எனினும் ஒருவர் 'தவக்கல்' வைத்து இவற்றைச் செய்யாமலிருப்பது சிறந்ததே என்றும் கூறுகின்றனர்.

இவ்விரு அத்தியாயங்களின் சிறப்பு :

இன்றிரவு அல்லாஹு ஸுப்ஹானஹு வ தஆலா சில வசனங்களை இறக்கி வைத்தான். அவை மிகவும்



விசேஷமானவை என்று எனக்குத் தோன்றுகிறது என்று அவ்விரு அத்தியாயங்களின் பெயர்களையும் கூறினார்கள்.

*- அறிவிப்பவர்கள் : ஹஸ்ரத் உக்பதுப்னு ஆமிர் (ரலி), நூற்கள்: முஸ்லிம், திர்மிதீ*

இவ்விரு அத்தியாயங்களையும் நபி (ஸல்) அவர்கள் காலைத் தொழுகையில் ஓதி வந்திருக்கிறார்கள். இவ்விரு அத்தியாயங்களும் இறங்குவதற்கு முன்னர் அவர்கள் கண்ணேறு நீங்குவதற்கு வேறு துஆக்களை ஓதி கண்ணேறு பீடிக்கப்பட்டவர்கள் மீது ஊதுவார்கள்.

*நூற்கள்: திர்மிதீ, நஸயீ, முஸ்தத்ரிக், ஹாக்கிம்*

இவ்வத்தியாயம் வெளியான பின் இவற்றையே ஓதுவார்கள். நபி (ஸல்) அவர்கள் நோயுற்ற பொழுதும் இவ்விரண்டையும் ஓதித் தங்கள் மீது ஊதிக் கொள்வார்கள்.

*அறிவிப்பவர்கள் : ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) நூற்கள்: முஅத்தா, புஹாரி, முஸ்லிம்*

இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: 'அல்லாஹ் மருந்தில்லாத நோயை இறக்கவே யில்லை. விஷத்துக்கும், வெட்டுக் குத்துக்கும் தவிர மாட்டுப் பால் மிக நல்லது. ஏனெனில் அது (மாடு) ஒவ்வொரு பயிர்ப் பச்சையிலும் மேய்கிறது.'

ஒரு முறை காட்டரபிகள் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள், 'நாங்கள் மந்திரிப்பது குற்றமா?' என்று, நபி (ஸல்) அவர்கள், 'இறையடியார்கள் இடத்திலே மந்திரியுங்கள். ஏனெனில், அல்லாஹ் சுகமில்லாத நோயை படைக்கவே இல்லை' (மந்திரிப்பதிலும் சுகமிருக்கலாம்) என்று கூறினார்கள்.

*- அறிவிப்பவர்கள் : உஸா இப்னு ஷரீக் என்பவர் மூலம், ஜியாத் இப்னு அலாக்கா மூலம், ஸுஃப்யான் இப்னு உயைய்யனா (ரஹ்)*

(அறிவிப்பாளர் நேரில் கேட்டறிந்த தகவல்.)

அர்தாத் என்பவரின் மகன் ஹஜ்ஜாஜ் என்பவர் பற்றிய தகவல்:

மந்திரிப்பது பற்றி இவர் அதாஉ என்பவரிடம் கேட்டாராம், ‘அது ஒன்றும் வெறுக்கத்தக்கது என்று நான் கேள்விப்படவில்லை. உடம்பு நன்றாக இருந்தால்தானே இறை வணக்கத்தில் ஈடுபட முடியும்! ஆகவே, மருந்து காயம் கற்றுக் கொள்வதும் மற்ற சட்ட திட்டங்களைக் கற்றுக் கொள்வது போலத்தான்’. பல அறிஞர்களின் கருத்துப்படி வேறு ஆதாரம் தெளிவாகக் கிடைக்காதிருக்கும்போது, எப்படிச் சட்டமாக ஏற்கப்படுகின்றதோ, அதைப் போன்றே நோயின் முதல் நாடி (காரணத்தை)யைக் கண்டு கொள்ள கையாளப்படும் மந்திரிப்பதும் மருத்துவமாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே மந்திரிப்பது கூடாது என்று ஏற்கனவே வந்துள்ள செய்திகளெல்லாம் செல்லாது.

காரணம், நபி (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் இதனைத் தடுத்து வந்தார்கள். பின்னர், அதனை ஆகுமாக்கிய செய்தி உள்ளது. இதோ அந்தச் செய்தி :

‘நாயகம் (ஸல்) அவர்கள் மந்திரிப்பதைத் தடுத்திருந்தார்கள். உமர் இப்னு கர்ரம் என்பாருடைய குடும்பத்தாரில் மந்திரிப்பவர் ஒருவர் இருந்தார். அவர் பாம்புக் கடிகளுக்கு மந்திரித்தார். அப்படிப்பட்டவரை நாயகம் (ஸல்) அவர்களிடத்திலே கொண்டு வந்து (நிறுத்தி), ‘இவர் மந்திரிப்பவர்’ என்று அறிமுகப்படுத்திய பொழுது,

‘பார்த்தீர்களா? நீங்கள் மந்திரிப்பதை தடுத்திருக்கிறீர்கள். ஆனால் இவர் செய்து கொண்டிருக்கிறார்!’ என்று அவரைக் கொண்டு வந்தவர்கள் குற்றஞ்சாட்ட, அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்,

‘நான் தடுத்திருந்தது உண்மைதான். ஆனால் இதில் ஏதும் தீங்கிருப்பதாக தெரியவில்லை. ஆகவே உங்களில் மந்திரிக்கத் தெரிந்தவர் அடுத்த சகோதரருக்கு பயனளிக்கும் வகையில்



இதனைத் தாராளமாகச் செய்யட்டும். ஆனால் மருந்தினால் சுகமாகும் என்றிருந்தால் மந்திரித்துக் கொண்டிருக்க வேண்டாம். நோய் சுகமாவது அல்லாஹ்த் தஆலாவைக் கொண்டுதான் என்றாலும் மருந்தும், மந்திரமும் ஒரு காரணம்தான். ஆகவே அதில் கெடுதி இல்லை.’

மந்திரிப்பதும், மருந்திடுவதும் குற்றமில்லை என்பதற்கு இன்னமும் சில ஆதாரங்கள் உள்ளன.

நாயகம் (ஸல்) அவர்கள் உஹதுப் போரில் காயமுற்றார்கள். ஓர் எலும்பைக் கொண்டு மருத்துவம் செய்யப்பட்டது.

தீர்ப்பு : நோய் வந்தால் அல்லாஹ்தான் நீக்குவான். ஆனாலும் மருந்தைத் தேடுவது முக்கியம். மருந்தால் முடியாததை ஓதிப் பார்த்துக் குணமாக்குவதில் தவறு இல்லை. எதில் சுகம் ஏற்படும் என்பதை யார் அறிவார்.

## ஆயத்துஷ் ஷி:ஃபா நோய் தீர்க்கும் ஆயத்துகள் ஆறு

திருக் குர்ஆனில் ‘ஷி.:.பா’வுடைய ஆயத்துக்கள் ஆறு உள்ளன. அவை வருமாறு :

1. வஎஷ்.:.பி ஸுதூர கவ்மிம் மு.:.மினீன்

2. ஷி.:.பாஉன் லிமா.:.பிஸ்ஸுதூர்

3. .:.பீஹிஷி.:.பா உல்லின்னாஸ்

4. வநுநஸ்ஸிலு மினல் குர்ஆனி மாஹுவ ஷி.:.பாவுன் வரஹ்மத்துல் லில்மு.:.மினீன்

5. வஇதா மரிள்த்து .:.பஹுவ எஷ்.:.பீன்

6. குல்ஹுவ லில்லதீன ஆமனூ ஹுதன் வஷி.:.பாவுன்

திருக்குர்ஆன் ஆன்மீக நோய்களுக்கு மருந்தாக இருப்பது போன்று உடல் நோய்களுக்கும் மருந்தாக இருக்கிறது. ஹல்ரத் அபுல் காஸிமில் குஷைரீ (ரஹ்) அவர்களின் புதல்வர்களில் ஒருவருக்குக் கடுமையான நோய் ஏற்பட்டு விட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இமாம் அவர்கள் அல்லாஹ்வைக் கனவில் கண்டு இறைவனிடம் தம் புதல்வருக்கு ஏற்பட்டிருந்த நோயைக் குறித்து முறையிட்டார்கள். அதற்கு இறைவன் திருக் குர்ஆனிலுள்ள ஷி. பாவுடைய ஆயத்துகளை ஓதி நோயாளி மீது ஊதுவதுடன், ஒரு பீங்கானில் அவற்றை எழுதிக் கழுவிக் கொடுக்குமாறு கட்டளையிட்டான். அவ்வாறு செய்ததன் காரணமாக அக்குழந்தையின் நோய் அகன்றது.

'பல மஷாயிகுகள் நோயாளிகளுக்கு இந்த ஷி. பாவுடைய ஆயத்துகளை ஒரு பாத்திரத்தில் எழுதிக் கரைத்துக் கொடுப்பதை நான் பார்த்திருக்கிறேன்' என்று தாஜுத்தீன் ஸுப்கீ (ரஹ்) அவர்கள் தங்களின் 'தபகாத்' என்னும் கிதாபில் எழுதியுள்ளார்கள்.

'திருக் குர்ஆனைக் கொண்டு நலவு தேடாதவருக்கு அல்லாஹ் நலவையளிக்கமாட்டான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

## 11. மந்திரிப்பதற்கு கூலி வாங்கலாமா?

ஸஹாபி (தோழர்களின் ஒரு கூட்டத்தார்)கள் ஒருமுறை (வெளியிடத்திற்குப்) பயணம் சென்றார்கள். அரபு கோத்திரங்களில் ஒரு கோத்திர(ம் தங்கி இருக்கின்ற ஒரு கிராம)த்தில் இறங்கி, தங்களுக்கு அவர்கள் விருந்தளிக்க வேண்டுமென்று (அக்கிராம வாசிகளிடம்) கோரினர். அவர்களுக்கு விருந்தளி(த்து அவர்களின் பசியைப் போ)க்க அவர்கள் (யாவரும்) மறுத்து விட்டனர்.

அக்கோத்திரன் தலைவரை ஏதோ விஷ ஜந்து கடித்துவிட்டது. அவருக்கு அவர்கள் (பலவிதமான) சிகிச்சைகள்



செய்தும் பலனில்லை. '(நம்மிடத்தில் வந்து தங்களுக்கு விருந்தளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட) அவர்களிடம் செல்லுங்கள். அவர்களில் எவரிடத்திலேனும் (இதற்கான பரிகாரம் செய்ய) ஏதேனுமிருக்கும்' என்றனர். (இதனை) மற்றவர்களும் ஏற்றுக் கொண்டனர். ஆதலின் அவர்கள் (ஸஹாபிகளிடத்தில்) வந்து,

'மக்களே! எங்கள் தலைவர் விஷம் தீண்டப்பட்டார். அவருக்காக நாங்கள் (பகீரதப்) பிரயத்தனம் செய்தோம். அவருக்கு ஒன்றும் பலனளிக்கவில்லை. உங்களில் எவரிடத்திலேனும் ஏதேனும் இருக்கிறதா?' என்று வினவினார்கள். அவர் (ஸஹாபி)களில் ஒருவர், 'ஆம்! நான் ஓதிப் பார்க்க முடியும். (மந்திரிப்பேன்) என்றாலும், எங்களுக்கு விருந்தளிக்குமாறு உங்களை நாங்கள் கேட்டுக் கொண்டோம். எங்களுக்கு நீங்கள் விருந்தளிக்கவில்லை.

'ஆதலின், எங்களுக்குக் காணிக்கை வைக்காத வரையில் உங்களுக்கு நான் மந்திரிக்கப் போவதில்லை' என்றார். ஓர் ஆட்டு மந்தையையே அவர்களிடம் கொடுத்து விடுவதாக கூறி ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

அதன்பேரில் அவர் சென்று, 'அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்' என்ற ஸூராவை ஓதி மந்திரித்தார். அவர் கட்டவிழ்த்து விடப்பட்டவர் போல் (உடனே) குணமாகி விட்டார். எழுந்து உலவ ஆரம்பித்து விட்டார். அவருக்கு எவ்வித நோயும் வராதது போல் ஆகிவிட்டார். அவர்கள் ஒப்பந்தம் செய்திருந்த கூலியை கொடுத்து விட்டனர்.

## நபி (ஸல்) அவர்கள் அதனை ஆதரித்தார்கள்!

இதனைப் பங்கிட்டு கொள்ளுங்கள் என்று ஸஹாபிகளில் சிலர் கூறினர். ஆனால், 'நபி (ஸல்) அவர்களிடம் சென்று நிகழ்ந்த செய்தியை அவர்களிடம் கூறி, நமக்கு அவர்கள் எவ்வாறு கட்டளையிடுகிறார்கள் என்பதை பார்த்துக்

கொள்ளாதவரை அவற்றை ஒன்றும் செய்யாதீர்கள்' என்று மந்திரித்தவர் கூறினார்.

பின்னர் நபி (ஸல்) அவர்களிடத்தில் அவர்கள் வந்து (செய்தியைக்) கூறினர். 'அது மந்திரம் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று நபி (ஸல்) அவர்கள் வினவினார்கள். பின்னர், நீங்கள் நன்கு செய்தீர்கள். (அவற்றை) நீங்கள் பங்கிட்டுக் கொள்ளுங்கள். எனக்கும் உங்களுடன் ஒரு பங்கை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்' என்று கூறிச் சிரித்தார்கள்.

*- அறிவிப்பவர் : அபூ ஸயீதினில் குத்ரீ (ரலி)*

மேற்கூறிய ஹதீஸை ஆதாரமாகக் கொண்டு இக்கால கயிறு வியாபாரிகள், முடிச்சுப் போடுவோர், தாயத்துக் கட்டுவோர், தகடு வேலை செய்வோர் அனைவரும் பாமர முஸ்லிம்களை மட்டுமின்றி, முஸ்லிமல்லாதவர்களையும் ஏமாற்றித் தம் வயிற்றுப் பிழைப்பை நடத்தி வருகின்றனர். அவர்கள் பாமர மக்களிடம் அவிழ்த்துவிடும் பொய் மூட்டைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

நபித் தோழர்கள் ஓதிப் பார்ப்பதற்கு கூலி ஏன் கேட்டார்கள்? என்பதையும், அவர்கள் அவ்வாறு கேட்க வேண்டிய கட்டாயத்தையும் மறந்து விடக்கூடாது.

இந்த ஹதீஸ் மூலம் நாம் விளங்கிக் கொள்வது யாதெனின் திருமறையின் வசனங்களைக் கொண்டு ஓதிப் பார்ப்பது கூடுமென்றும், அதற்கு நியாயமான அளவிற்குக் கூலி பெறுவதும் கூடும் என்பதேயாகும்.

'திருக்குர்ஆன் வசனங்களைக் கொண்டு மந்திரிப்பது கூடும், அதற்குரிய கூலி வாங்குவது குற்றமல்ல. பொருள் புரியாத சொற்களைக் கொண்டு மந்திரிப்பதுதான் கூடாது' என்று இமாம் முஹம்மது (ரஹ்) அவர்கள் தம்முடைய 'முஅத்தா'வில் எழுதியுள்ளார்கள்.



என்றாலும், இதையே தொழிலாகக் கொண்டு பிழைப்பு நடத்துவது மார்க்கத்திற்குப் புறம்பான செயலாகும்.

இதை இஸ்லாம் அனுமதித்த முறையில் செய்ய வேண்டுமேயன்றி முரணான முறையில் செய்வது கூடாது. அதாவது அல்லாஹ்வைத் தவிர மற்ற படைப்பினங்களிடத்தில் உதவி தேடுவது முதலிய அதில் காணப்படக் கூடாது. ஆயத்துக்களை ஓதி ஊதலாம். எழுதிக் கட்டலாம். கரைத்துக் குடிக்கலாம். குர்ஆன், ஹதீஸ் அல்லாதவற்றைக் கொண்டு மந்திரிப்பது, த.ஃவீஸ் கட்டுவது என்றிருந்தால் அவற்றின் பொருள் புரிந்திருக்க வேண்டும். அவற்றில் 'ஷிர்க்'கான பொருள்கள் இருக்கக் கூடாது.

அறியாத முஸ்லிம்கள் சிலர் தேவதைகளை வணங்கி, கு.ஃப்ர், ஷிர்க் முதலியவற்றைக் கற்று, அதன் மூலமாகத் தங்கள் மாந்திரீகத் தொழிலை நடத்துகின்றனர். இது விக்கிரக வணக்கம் என்னும் 'ஷிர்க்' ஆகும். ஆகவே இவர்கள் தங்கள் ஈமானைப் புதுப்பித்து உடனே தவ்பா செய்து கொள்வது கடமையாகும்.

இவர்களைக் கொண்டு மாந்திரீகம் செய்பவர்களும் கு.ஃப்ரான காரியத்தைச் செய்பவர்களாக ஆகிவிடுகிறார்கள். மாந்திரீக சிகிச்சை பெறுவோர் இதை முக்கியமாக கவனிக்க வேண்டும்.

## 16. சூனியம் செய்யலாமா?

'இன்னும் முடிச்சுக்களில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கைவிட்டும்'

'பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும்போது உண்டாகும் தீங்கை விட்டும் (காவல் தேடுகிறேன்.)'

மேற்காணும் இரு இறை வசனங்களும் 'ஸூரத்துல் ஃபலக்' என்னும் அத்தியாயத்தில் உள்ளனவாகும். நபி (ஸல்) அவர்களுக்குச் சூனியம் செய்யப்பட்டு அதன் பின்னர் திருக் குர்ஆனிலுள்ள 'ஸூரத்துன்னாஸ்', 'ஸூரத்துல் ஃபலக்' ஆகிய ஸூராக்களைக் கொண்டு சூனியம் அகற்றப்பட்ட நிகழ்ச்சியும் இதில் கூறப்பட்டுள்ளது.

**ரிவாயத்து :**

திரு மதீனாவில் லபீ துப்னு அக்ஸம் என்னும் யூதன் தன் பெண் மக்கள் மூலம் நபி (ஸல்) அவர்களுக்கு சூனியம் செய்வித்து 'தர்வான்' என்னும் பாழுங்கிணற்றில் ஒரு கல்லுக்கு அடியில் வைத்துவிட்டான். இதனால் நபி (ஸல்) அவர்கள் சில நாட்கள் வரை உடல் நலமின்றி இருந்தனர். இதனைக் குறித்து ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குச் செய்தி அறிவித்ததன் பேரில் ஹல்ரத் அலீ (ரலி), தல்ஹா (ரலி) ஆகியோரை அனுப்பி அக்கிணற்று நீரை இரைத்து குறிப்பிட்ட கல்லுக்கு அடியில் வைக்கப்பட்டிருந்த சூனியப் பொருட்களை எடுத்து வரச் செய்தனர்.

ஒரு முடியினால் ஆன நூலில் பதினோரு முடிச்சுக்கள் போடப்பட்டிருந்தன. அவற்றின் முடிச்சுக்களை இந்த ஸூரத்திலும் இதற்கு பின்னர் உள்ள ஸூரத்திலுமுள்ள பதினோரு ஆயத்துக்களையும் ஓதி அவிழ்த்து விட்டார்கள். அதன் பின்னர், நபி (ஸல்) அவர்கள் நலம் பெற்றார்கள். இச்சூனியத்தைச் செய்தது இன்னார்தாம் என்ற செய்தி வெளியாகிவிட்டதால் அவர்களைத் தண்டிக்க வேண்டாமா? என நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு வேண்டாம் என மறுத்து விட்டார்கள்.

அதாவது நபி (ஸல்) அவர்கள் தமக்கு இழைக்கப் பெற்ற தீங்கை மன்னித்து விடுவார்கள். அல்லாஹு தஆலாவின் காரியத்தில் தவறு செய்தால் தீங்கு செய்பவர்களை மன்னிப்பதில்லை. இந்த ரிவாயத்தைக் குறித்து முற்காலத்தவர்கள் பலத்த தர்க்கம் (விவாதம்) செய்துள்ளனர். 'முஃதஸிலா' எனும் பிரிவினரும் இன்னும் சிலரும் இந்த ரிவாயத்தை பலமாக மறுக்கின்றனர். இஃது ஆதாரமற்ற தவறான செய்தி என்று கூறுகின்றனர்.

நபி (ஸல்) அவர்கள் சூனியம் செய்யப்பட்டவர்கள் என்று காஃபிர்கள் குத்தலாகப் பேசுகின்றனர். இந் நிகழ்ச்சி உண்மைதான் என ஏற்கப்படுமாயின் காஃபிர்கள் குறை கூறியது மெய்யாகிவிடும். அவ்வாறு நிகழ்வதை விட்டும் அண்ணலாரின் 'தரஜா' உயர்வானது. இதனைக் குறித்து இறைவன், 'மேலும், அல்லாஹ் மக்களை விட்டும் உம்மைக் காப்பாற்றுவான்' என்று கூறியிருக்கின்றான். இந்நிகழ்ச்சி உண்மையாயிருக்குமாயின் இறைவன் கூறிய இவ்வாக்குறுதி பொய்யாகிவிடும் என்பது இவர்களின் விவாதமாகும். இதற்கு மறுப்பாக காஃபிர்கள், நபி

(ஸல்) அவர்களைக் குறித்தும் 'மஸ்ஹூர்' (சூனியம் செய்யப்பட்டவர்) என்று கூறியது பைத்தியக்காரர் என்று பொருள் கொண்டது.

இங்கு குறிப்பிட்டுள்ள சூனியம் பற்றிய நிகழ்ச்சி அவ்வகையைச் சேர்ந்ததல்ல. 'மேலும் அல்லாஹ் உம்மை மக்களை விட்டும் காப்பாற்றுவான்' என்று இறைவன் கூறியிருப்பதன் கருத்து, 'மக்கள் நபி (ஸல்) அவர்களைக் கொன்றுவிடாமல் காப்பாற்றுவான்' என்பதாகும். கா∴பிர்களின் எண்ணம் எவ்வகையில் நபி (ஸல்) அவர்களைக் கொன்றுவிட வேண்டும் என்பதாகவே இருந்தது. அல்லாஹ் அதற்குரிய வாய்ப்பை அளிக்கவே இல்லை.

நபி (ஸல்) அவர்களுக்கு நோயே வராது, உடல் சம்பந்தமான எந்த தொல்லையும் அவர்களைப் பீடிக்காது என்று இறைவன் கூறியுள்ளதாக அந்த ஆயத்துக்கு விளக்கம் செய்யக் கூடாது. உஹது போரில் நபி (ஸல்) அவர்களின் பல் ஷஹீதாயிற்று. கைபரில் யூதப் பெண் ஒருத்தி நஞ்சு கலந்த மாமிசத்தை சமைத்துக் கொடுத்தாள். இதன் தீங்கு வெயில் காலம் துவங்கும் போதெல்லாம் தொல்லைக் கொடுத்துக் கொண்டே வந்தது. இத்தகைய தீங்குகளெல்லாம் இறைவன் மேற்கண்ட பாதுகாவலுக்கு முரணாக இல்லையென்றால் யூதப் பெண்கள் செய்த வினையால் நபி (ஸல்) அவர்கள் சில நாட்கள் உடல் நலம் குன்றியிருந்தனரே அது மட்டும் எப்படி முரணாக இருக்க முடியும்? என்று விவாதிக்கின்றனர்.

மேலும், செய்வினையின் பயன் வெளியானது. நபித்துவ தகுதிக்கு எதிரானது அல்ல. இது சாதாரண மனிதன் என்ற நிலையில்தான் ஏற்பட்டது. உண்ணல், பருகல், உறங்குதல் முதலிய மனிதன் என்னும் நிலைக்குள்ள செயல்கள்தான். ஆகவே, மனித இனத்திற்கு ஏற்படக்கூடிய, நிகழக்கூடிய அனைத்தும் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நிகழ்வது சாதாரணமேயாகும்.

'செய்வினை செய்பவர்களைப் பிறர் செய்வினை செய்ய முடியாது. அவ்வாறு செய்தாலும் அது பலிக்காது' என்பது கா∴பிர்களின் எண்ணம். நபி (ஸல்) அவர்கள் செய்வினைக்காரராக இருந்தால் யூதப் பெண்கள் செய்த செய்வினை பலிக்காமல் போயிருக்குமல்லவா? எனவே நபி (ஸல்) அவர்கள் செய்வினைக்காரர் என்று கா∴பிர்கள் எண்ணியிருந்தது இதனால் மறுக்கப்படுகிறது என்று மறுப்பாளர் சமாதானம் கூறுகின்றனர்.

## 17. ஜின்னையே இஸ்லாமாக்கிய அறிஞர்!

மனாமா, ஏப், 17 - இறைவனின் கோபத்திற்கு இலக்கான 'ஜின்'கள் என்று சொல்லப்படும் 'கெட்ட ஆவிகள்' உலவிக் கொண்டுள்ளன. அவை சில நேரங்களில் மனிதனின் உடலில் புகுந்து ஆட்டிப் படைக்கின்றது என்பது இஸ்லாமியர் நம்பிக்கை. ஓர் அரபுப் பெண்ணின் உடலில் புகுந்து வலிப்பு நோயை உண்டாக்கி வருத்திய 'ஜின்'னையே இஸ்லாமாக்கி இருக்கிறார் ஓர் அரபுநாட்டு இஸ்லாமிய தத்துவ வித்தகர். பல்வேறு உருவங்களில் நடமாடும் 'ஜின்'கள் மனிதனின் உடலில் புகுந்து கெட்ட நடவடிக்கைகள் அனைத்திற்கும் தூண்டுதல் செய்யுமாம்.

அரபுப் பெண்ணின் உடலில் புகுந்த 'ஜின்' உண்டாக்கிய வலிப்பு நோயைப் போக்க எத்தனையோ டாக்டர்கள் முயன்றும் முடியவில்லை. மனிதர்களிடையே உயர்ந்த நெறிகளை வளர்த்து ஜின்களை அண்டவிடாது தடுப்பதற்கென்றே செயல்பட்டு வரும் ஓர் அமைப்பு சவூதி அரேபியாவின் முன்னணி தத்துவ ஞானி ஷேக் அப்துல் அஜீஸ் பின் பாஸ் இடம் அந்தப் பெண்ணை அழைத்து வந்தனர். அவர் அந்தப் பெண்ணை வருத்திய ஜின்னை விரட்டியதுடன், ஜின்னை இஸ்லாத்தைத் தழுவுமாறும் செய்திருக்கிறார் என்ற தகவலை 'அல் மதீனா' என்ற சவூதி பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

*நன்றி : தினமணி, 18-4-87 - மதுரை பதிப்பு*

அல்லாஹு தஆலா தெய்வீகத் தன்மையில் தனித்தவன், ஏகன் யாவும் அவனின் படைப்புகளே. மலக்குகளையும், ஜின்களையும், மனிதர்களையும் அவனே படைத்தான். அவர்களின் உருவத்தையும், நிலைகளையும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுத்தி வைத்துள்ளான்.

மலக்குகள் ஆடவர்களுமல்லர், பெண்டிருமல்லர், அவர்கள் பிள்ளை பெறவும் மாட்டார்கள். உண்ணவும் மாட்டார்கள். பருகவும் மாட்டார்கள். ஜின்கள் பிள்ளை பெறுவார்கள். அவர்களுள் ஆடவரும் பெண்டிரும் உண்டு. அவர்கள் மரிக்கவும் செய்வார்கள். ஷைத்தான்களில் ஆண்களும் உண்டு. பெண்களும் உண்டு. பிள்ளைகளும் பெறுவார்கள். இப்லீஸ் இவ்வுலகம் முடியுமட்டும் இருப்பது போல், அவர்களும் உலகம் முடியும் வரை இருப்பார்கள். இப்லீஸ்தான் ஜின்களுக்குத் தந்தை, அவனிலிருந்தே ஷைத்தான்களின் கூட்டம் தோன்றுகிறது என்று சொல்லப்படுகிறது என்பதாக ஸயீதுப்னுல் முஸய்யப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

இப்லீஸ் என்னும் சொல்லுக்கு சுர்யானி மொழியில் 'அZஜாZஜீல் **(Azazeel)** என்று பெயர் இருந்தது. அரபி மொழியில் 'அல்ஹாரிஸ் என்று பெயர். ஆனால் அவன் 'ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு ஸுஜூது செய்ய மறுத்து இறைவனின் 'ரஹ்மத்' எனும் அன்பு, அருள்களை விட்டும் தொலைவிலாகி, இது தனக்கு இல்லை என்ற நிராசை கொண்டு விட்டதால், நிராசைக்காரன் என்னும் பொருளில் 'இப்லீஸ்' என்னும் பெயர் வந்தது. எனவே இப்லீஸ் என்பது காரணப் பெயர்' என்று பகவீ (ரஹ்) கூறுகின்றார்கள்.

## *18. நபி சுலைமான் (அலை) அவர்களும் ஜின்னும்*

'மேலும், ஜின்கள், மனிதர்கள், பறவைகள் ஆகியவற்றிலிருந்தும் ஸுலைமானுக்கு அவருடைய படைகள் திரட்டப்பட்டு, அவை (தனித்தனியாக)ப் பிரிக்கப்பட்டன.' *(27:17)*

வல்லோன் அல்லாஹ் நபி ஸுலைமான் (அலை) அவர்களுக்கு அளித்திருந்த தனிச் சிறப்பினை இவ்வசனம் மூலம் கூறுகின்றான். அல்லாஹ், நபி அவர்களுக்கு பறவைகள், எறும்புகள் ஆகியவற்றின் மொழிகளையும் அறிந்திடும் ஆற்றலைக் கொடுத்திருந்தான். நாம் இங்கு நபி அவர்கள் ஜின்னுடன் கொண்டிருந்த தொடர்பு பற்றிச் சிலவற்றைப் பார்ப்போம்.

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் தங்களின் தோழர்களை நோக்கி, 'இப்ரீத் என்ற ஜின் என்னுடைய தொழுகையைக் கெடுப்பதற்காக என்மீது வைகறையில் காறி உமிழ்ந்தான். இறைவன் எனக்கு அவன் மீது ஆற்றல் அளித்தான். அவனை எட்டிப் பிடித்துக் கொண்டேன். அவனை நீங்களெல்லாம் பார்க்கும் வண்ணம் இங்குள்ள தூண்களில் ஒன்றில் கட்டிப்போட எண்ணினேன். அப்பொழுது ஸுலைமான் (அலை) அவர்கள் இறைவனிடம் செய்த இறைஞ்சுதல் என் நினைவுக்கு வந்தது. எனவே அவனை விட்டு விட்டேன்' என்று கூறினர்.

அந்த இப்ரீத் என்ற ஜின் பூனையின் வடிவில் வந்ததாகக் கூறப்படுகிறது.

அல்லாஹ் தன் அருள்மறையில், ஸுலைமானுக்கு செம்பாற்றை உருக்கித் தந்தோம் என்று கூறுகிறான். எமன் நாட்டில் ஓர் ஊர் இருந்தது. அவ்வூரில் நீர் ஓடுவது போன்று செம்பு உருகி ஓடிற்று. இன்று வரை மக்கள் யாவரும் ஸுலைமான் நபிக்காக ஏற்படுத்தப் பெற்ற அந்த செம்பு ஆற்றினால் பயன் பெற்று வருகின்றனர்.

அல்லாஹ் ஜின்களையெல்லாம் அவர்களுக்கு வசப்படுத்திக் கொடுத்தான். நபி அவர்களுக்கு அந்த ஜின்கள் உதவியாய் இருந்து வந்தன.

அந்த ஜின்களில் ஏதேனும் ஒரு ஜின் அவர்களின் ஏவலுக்குக் கட்டுப்பட மறுத்தால், 'ஸகீர் என்ற நரகத்தின் நெருப்பைக் கொண்டு அந்த ஜின்னுக்கு அதாபை

ஏற்படுத்துவோம்.' இவ்வுலகிலும் மறுஉலகிலும் அந்த ஜின்கள் மீது அல்லாஹ் ஒரு வானவரைச் சாட்டியுள்ளான். அவ்வானவர் தம் கையில் நெருப்பால் ஆன சாட்டையை வைத்துள்ளார். நபிக்கு வழிப்பட மறுத்திடும் ஜின்களை அச்சாட்டையால் அடிப்பர். அந்த நெருப்பால் ஆன சாட்டை ஜின்னை எரித்துவிடும்.

ஜின்கள் நபி அவர்களுக்குப் பெரிய இயந்திரங்களால் மாவு அரைத்துக் கொடுப்பது, மாளிகை கட்டுவது, குளியல் அறைகள் கட்டுவது, ஆறு, குளங்கள் வெட்டுவது, பக்தாதுடைய ஆற்றைத் தோண்டி அம்மண்ணை கரையின் இரு புறங்களிலும் போடுகின்ற கடினமான பணிகளைச் செய்து வந்தன. இன்னும் சில ஜின்கள் கடலில் மூழ்கி முத்துக்கள், மாணிக்கம் போன்ற விலையுயர்ந்த பொருள்களையும் கொண்டு வரும் பணிகளைச் செய்து வந்தன.

வஹப் இப்னு முனப்பஹ் கூறுகின்றார்கள் : நபி ஸுலைமான் (அலை) அவர்கள் தம் அரியணையில் தங்களின் அரசப் பிரமுகர்களுடன் வீற்றிருப்பார்கள். காற்று அவர்களின் சிம்மாசனத்தைத் தூக்கிக் கொண்டு கடலோரம் செல்லும். அச்சமயம் நபியவர்கள் ஒரு ஜின்னை அழைத்து, 'இக்கடலில் நிகழும் அற்புதங்களையெல்லாம் கண்டு வா!' என ஆணையிடுவார்கள்.

அந்த ஜின் உடனே கடலில் மூழ்கி மீண்டும் மேலே வரும். நபி அவர்கள் அதனிடம், 'நீ கடலில் கண்ட காட்சிகள் யாவை?' என வினவியதும்,

'நபியே! அக்கடலில் அலைகளையும், மீன்களையும் அன்றி வேறொன்றையும் காணவில்லை. ஆனால், அல்லாஹ்வின் தூதரே! ஒரு வானவரைக் கண்டேன். அவ்வானவர் என்னை விளித்து, 'எங்கே போகின்றாய்?' எனக் கேட்டார். அதற்கு நான் 'நபி ஸுலைமான் (அலை) அவர்கள் இக்கடலில் மூழ்கி அதன் ஆழத்தை அறிந்து வருமாறு ஏவினார்கள். நான் அதனைப் பார்க்கப் போகிறேன்' என்று கூறினேன்.

'அப்பொழுது அவ்வானவர், 'நீ திரும்பிச் சென்று அவர்களுக்கு என் ஸலாம் சொல்லுவாயாக! மேலும், நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் இக்கடலில் வந்த கப்பல் ஒன்றில் ஒரு கூட்டத்தார் பயணம் செய்தனர். அவர்களுள் ஒரு தச்சனும் இருந்தான். அவன் கப்பலின் மேல் தளத்திலிருந்த பொழுது அவனுடைய கருவி ஒன்று தவறிக் கடலில் விழுந்து விட்டது. அவனுடைய ஆயுதம் இன்னும் கடலின் ஆழத்தை அடையவில்லை என்று நபியவர்களிடம் கூறுவாயாக!' என்றார்.

அவ்வாறு அந்த ஜின் கூறியதைக் கேட்டு நபி அவர்கள் வியப்புற்றார்கள். மீண்டும் இன்னொரு ஜின்னை அனுப்பி, 'நீ சென்று கடலின் ஆழத்தைக் கண்டு வா!' என்றார்கள்.

அந்த இரண்டாம் ஜின் முதல் ஜின்னை விட அதிக ஆழத்திற்குச் சென்று அங்கிருந்து ஒரு குப்பாவை எடுத்து நபியவர்களிடம் வைத்தது. அக்குப்பாவில் ஒரு வாசலும் இரண்டு கதவுகளும் இருந்தன. அக்குப்பாவிலிருந்து ஓர் இளைஞர் வெண்ணிற ஆடை அணிந்திருந்த நிலையில் வெளியில் வந்தார். அப்பொழுது நபியவர்கள், 'நீ மனிதனா? ஜின்னா?' என வினவினர். அதற்கவர் 'நான் மனிதன்தான்!' என்றார்.

'உன் வரலாறு என்ன?' என்று ஸுலைமான் (அலை) அவர்கள் வினவினார்கள்.

அப்பொழுது அந்த இளைஞர், 'அல்லாஹ்வின் தூதரே! எனக்கொரு தாயிருந்தார். நான் அவருக்குப் பணிவிடை செய்து நன்றியுடன் நடந்து வந்தேன். என் தாயாரை மரணம் நெருங்கியபொழுது, நான் அவரிடம் எனக்காக இறைவனிடம் துஆச் செய்யுமாறு வேண்டினேன். என் தாயார் அல்லாஹ்விடம்,

'என் இறைவா! என் மகன் எனக்காக எவ்வளவோ பணிவிடைகள் செய்திருக்கிறான். நீயும் அதனை அறிந்துள்ளாய்! எனவே, இப்லீஸும், அவன் கூட்டத்தார்களும் என் மகனை அண்டாமல் பாதுகாப்பாயாக! மேலும் அவனிடம் நெருங்க முடியாத நிலையில் ஓர் இடத்தில் அவனை

வைத்துவிடு! மேலும் அவனை உன்னை வணங்கி வழிபடக் கூடியவனாகவும் ஆக்குவாயாக!'என்று இறைஞ்சினார். என் தாயார் இறந்ததும் நான் அவரை அடக்கம் செய்துவிட்டு இக்கடல் பக்கம் வந்தேன். அப்பொழுது இந்தக் குப்பாவைக் கண்டேன். என் மனம் இதனுள் புகுவதற்கு நாடியது. உள்ளே புகுந்தேன். கதவுகள் மூடிக் கொண்டன. பின்னர், அலைகள் எழுந்து இந்தக் குப்பாவைக் கடலுக்குள் இழுத்துச் சென்றன' என்றார்.

நபியவர்கள் அந்த இளைஞரிடம், 'உமக்கு உணவும், நீரும் எவ்வாறு கிடைத்தன?' எனக் கேட்டார்கள். அதற்கு அந்த இளைஞர், 'வெண்ணிறப் பறவை ஒன்று தன் வாயில் ஒரு வெண்மையான பொருளை எடுத்து வந்து இரவில் கொடுக்கும். அதை உண்ட பின் எனக்கு எவ்விதப் பசியும், நீர் வேட்கையும் ஏற்படாது' என்றார்.

பின்னர் நபியவர்கள், 'உமக்கு இரவு, பகல் என்னும் வேறுபாடு எப்படித் தெரியும்?' எனக் கேட்டார்கள்.

'அக்குப்பாவில் வெள்ளைக் கீற்று ஒன்றும், கறுப்புக் கீற்று ஒன்றும் இருந்தன. வெள்ளைக் கீற்று அதிகமானால் பகலென்றும், கறுப்புக் கீற்று அதிகமானால் இரவென்றும் அறிந்து கொள்வேன்' என்றார் அந்த இளைஞர்.

பின்னர் அவ்விளைஞர் 'எனக்குச் செல்வதற்கு அனுமதி கொடுங்கள்!' என்று கேட்டார். நபியவர்கள் அனுமதி கொடுத்ததும் அந்த இளைஞர் குப்பாவிற்குள் புகுந்தார். கதவு மூடிக் கொண்டது அந்தக் குப்பாவைக் கடல் அலைகள் கடலுக்குள் இழுத்துச் சென்று விட்டன.

## சுலைமான் நபியும் பைத்துல் முகத்தஸும்

அல்லாஹ், நபி தாவூத் (அலை) அவர்களை நோக்கி, 'தாவூதே! அவ்வீடானது தூய்மை செய்யப்பட்டதாகும். நீரோ மிகுதியாக பூமியில் இரத்தத்தை ஓடச் செய்துவிட்டீர். எனவே, நீர் அப்பள்ளியைக் கட்ட வேண்டாம். உமக்குப் பின் உம்முடைய மகன் ஸுலைமான் அப்பள்ளியை எழுப்புவார் (முழுமை செய்வார்)' என்றான். அதன் பின்னர் தாவூத் (அலை) பள்ளிவாசல் எழுப்பும் பணியை நிறுத்திவிட்டு அங்கேயே மரணமாகும்வரை தொழுது கொண்டிருந்தார்கள்.

பின்னர், நபி ஸுலைமான் (அலை) அவர்கள் அரியணை ஏறியபொழுது, அல்லாஹு தஆலா பைத்துல் முகத்தஸ் பள்ளியை முழுமைப்படுத்துமாறு ஆணையிட்டான். நபி அவர்கள் ஷைத்தான்களையும், ஜின்களையும், மனிதர் களையும் ஒன்று திரட்டி, வெள்ளைக் கற்களும், பளிங்குக் கற்களும் கொண்டு வரச் சொல்லி ஏவினார்கள். அவற்றைக் கொண்டு பைத்துல் முகத்தஸ் நகரத்தை நிர்மாணித்தார்கள்.

நகரம் உருவாக்கப்பட்ட பின்னர் பள்ளிவாசலை மாணிக்கக் கற்கள், யாகூத்துகளைக் கொண்டு கட்டத் துவங்கினார்கள். முத்துக்கள், மாணிக்கங்கள், யாகூத்துகள் முதலியவற்றைத் துளைபோடும் பணியை ஜின்கள் மிக சப்தத்துடன் செய்யத் தொடங்கின. துளைபோடும் பொழுது எழுந்த ஒலி பயங்கரமாக இருந்ததால், அப்பேரொலியைக் கேட்க சகிக்காத ஸுலைமான் (அலை) அவர்கள், 'ஒலி எழாமல் இதனைத் துளைபோட முடியாதா?' என்றார்கள்.

அப்பொழுது ஜின்கள், 'இவற்றைத் துளைபோடும் முறையை 'ஸஹ்ருல் இப்ரீத்' என்னும் ஜின்தான் மிக அறிந்தது. அதற்குத்தான் இதன் 'ஹிக்மத்' தெரியும்' என்றன.

அப்பொழுது ஒரு கடிதத்தில் தங்கள் முத்திரையைப் பதித்து, அதனை ஒரு ஜின்னிடம் கொடுத்தனுப்பினார்கள்.

ஷைத்தானை இறைவனின் ஆணைக்கிணங்க அழைத்தால் அது வழிபட்டு வரும். அழைக்கச் சென்ற ஜின் கடற்தீவு ஒன்றில் 'ஸஹ்ருல் இப்ரீதை' சந்தித்து முத்திரையிடப்பட்ட கடிதத்தைக் கொடுத்தது. அந்த இப்ரீத் எனும் ஜின், நபி அவர்களின் கடிதத்தைக் கொண்டு அஞ்சி உடனே புறப்பட்டு வந்தது.

நபி அவர்கள் அழைத்து வரச் சென்ற ஜின்னிடம், 'வரும் வழியில் இப்ரீத் என்ன செய்தது?' என்று வினவினர். அதற்கு அந்த ஜின், 'மனிதர்களைக் கடக்கும் போதெல்லாம் 'இப்ரீத்' அவர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டே வந்தது' எனக் கூறிற்று.

அப்பொழுது நபியவர்கள் இப்ரீதை நோக்கி, 'நீ என்னிடமே உன் பெருமையைக் காட்டுகிறாயா? நான் அழைத்ததும் என்னிடம் வராமல் மனிதர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டு வந்த காரணம் என்ன?' என்று கேட்டார்கள். அப்பொழுது இப்ரீத், 'அல்லாஹ்வின் தூதரே! அவர்களைப் பார்த்து வியந்து சிரித்தேன்' என்றது.

'என்ன புதுமையைக் கண்டாய் அவர்களிடம்?' என்று கேட்டார்கள் ஸுலைமான் (அலை).

'வரும் வழியில் ஒரு மனிதனைக் கண்டேன். அவன் ஆற்றிலிருந்து குடத்தில் தண்ணீரை எடுத்துக் கோவேறுக் கழுதையின்மேல் வைத்து, குடத்தின் வாயை அதில் கட்டி விட்டு (களாவுல் ஹாஜத்து) மலம் கழிக்கச் சென்றான். கழுதை அக்குடத்தை இழுத்துப் போய் உடைத்து விட்டது. அவன் கழுதையை நன்றாக அடித்து விட்டதை எண்ணியும், அவனின் முரட்டுத் தனத்தை எண்ணியும் வியந்தேன். பின்னர் வந்து கொண்டிருக்கையில், ஒருவன் காலுறையை (மோஜா) தைத்துக் கொண்டிருந்தான். தைக்கச் சொன்னவன், 'அந்தக் காலுறை நான்கு ஆண்டுகள் வரும் வரை வலுவாகத் தைப்பாயாக!' என்றான். அவன் அவ்வாறு கூறியதும், நான்காண்டுகளுக்குள் மலக்குல் மவ்த் வருவதை அவன் மறந்துவிட்டதை எண்ணிச் சிரித்தேன்.

'பின்னர் ஒரு கிழவியின் அருகே சென்றபொழுது, அவள் மக்களுக்கு மறைவான விஷயங்களைப் பற்றி குறி சொல்லிக் கொண்டிருந்தாள். அக்கிழவியின் விரிப்பின் கீழ் ஒருவன் பொன்னைப் புதைத்து வைத்திருந்தான். நான் அதை அறிவேன். அக்கிழவி அறியமாட்டாள். வானத்து இரகசியங்களைக் கூறும் இவள், தன் விரிப்பின் கீழ் புதைக்கப்பட்டுள்ள பொன்னைப் பற்றி அறியாதிருக்கிறாளே என்றெண்ணிச் சிரித்தேன்.

'ஒரு நகரத்தில் ஒரு மனிதனின் அருகே சென்றேன். அவனுக்கு ஏற்பட்டிருந்த ஒரு நோய்க்காக வெங்காயம் தின்றான். அதன் காரணமாக நோய் நீங்கிற்று. அவனோ எவருக்கு நோய் வந்தாலும் வெங்காயத்தையே தின்னுமாறு கூறினான். வெங்காயம் மூளையைக் கெடுத்துவிடக் கூடியதாயிற்றே! அதையறியாமல் அப்படிச் சொல்கிறானே என்றெண்ணிச் சிரித்தேன்.

'ஒரு கடையருகே சென்றேன். வெண்மை நிற வெங்காயம் மிகவும் நலமளிக்கும் மருந்தாகப் பயன்படுகிறது என்பதால் வியாபாரி அதனை விற்று வந்தான். மிளகு மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டால் அது நஞ்சாக மாறிவிடுகிறது. அவ்விரண்டையும் மருந்தாக அவன் விற்பதை எண்ணிச் சிரித்தேன்.

அதன் பின்னர் ஒரு கூட்டத்தார்களைக் கடந்து சென்றேன். அல்லாஹ்விடம் அக்கூட்டத்தார் தங்களுக்கு அவன் ரஹ்மத் செய்ய வேண்டும் என்று அருள் வேண்டி துஆச் செய்தார்கள். அவர்களின் துஆ ஏற்கப்படவில்லை. அவர்கள் சென்று விட்டார்கள். அதன் பின்னர் மற்றொரு கூட்டத்தார் அங்கு வந்தனர். அவர்கள் கேட்காமலேயே அல்லாஹ் அவர்கள் மீது அருள்புரிந்தான். இப்புதுமையை எண்ணிச் சிரித்தேன்' எனக் கூறியது.

பின்னர் நபி அவர்கள், 'மாணிக்கக் கற்களில் ஒலி எழாமல் உன்னால் துளைபோட முடியுமா?' என்று கேட்டார்கள். அதற்கு அந்த ஜின், 'நான் ஒரு வெள்ளைக் கல்லை அறிவேன். அது இருக்கும் இடம் அறியேன். 'இகாபு' என்னும் குருவியின் குஞ்சுகளைப் பிடித்து கல்லினால் செதுக்கப்பட்ட ஒரு பெட்டியில் அவற்றை அடைத்து விட்டால், அக்குருவி சப்தமின்றி அக்கல் பெட்டியைத் துளையிடும்' என்று சொன்னது.

நபி அவர்கள் ஒரு ஜின்னை 'இகாபு' என்னும் குருவியிடம் அனுப்பி, அக்கல்லைக் கொண்டு வருமாறு ஏவினார்கள். அவ்வாறே அக்கல்லும் கொண்டு வரப்பட்டது. அக்கல்லோ மோதிரக் கல் போன்றிருந்தது. அதனை அல்மாஸ் கல் என்று கூறுகின்றார்கள். (அல்லாஹ் அ.'.லம்) இந்நாள் வரையும் ஜவாஹிர்களை அக்கல் கொண்டுதான் துளை போடப்படுகின்றது.

பின்னர் நபி சுலைமான் (அலை) அவர்கள் பைத்துல் முகத்தஸை வெள்ளைப் பளிங்குகளினாலும், பச்சைப் பளிங்கு கற்களினாலும் கட்டினார்கள். அதன் தூண்களை 'மஹாத்துல் அபியலு' என்னும் கல்லினால் செய்து நிறுத்தி, மேற்புறம் மாணிக்கங்களைக் கொண்டு எழுப்பினார்கள்.

மஸ்ஜிதின் தரைகளில் 'பைரோஸா' (மொசைக்) கற்களால் விரிப்பை ஏற்படுத்தினார்கள். அக்காலத்தில் பைத்துல் முகத்தஸை விட அழகான பள்ளிவாசல் எதுவுமில்லை. இரவு நேரத்தில் அப்பள்ளிவாசல் பதினான்காம் இரவின் முழுமதி ஒளி வீசுவது போன்று ஒளிரும்.

பள்ளிவாசலைக் கட்டி முடித்ததும் நபி அவர்கள் இறைவனைத் தொழுது, பின்வரும் துஆக்களை இறைஞ்சினார்கள் :

அல்லாஹ்வே! என்னை உனக்குக் கீழ்படிந்து நடக்கும் நல்லடியானாக ஆக்கியருள்வாயாக!

அல்லாஹ்வே! நான் நன்முறையில் ஆட்சி செய்யப் பேருள் புரிவாயாக!

அல்லாஹ்வே! எவர் இந்தப் பள்ளியில் தொழுகிறாரோ அவருடைய பாவங்களையும் நீ மன்னித்தருள்வாயாக!'

'முதல் இரண்டு துஆக்களையும் இறைவன் ஏற்றுக் கொண்டான். மூன்றாம் துஆவையும் இறைவன் ஏற்றுக் கொண்டிருப்பான் என்று எண்ணுகிறேன்' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

## சுலைமான் (அலை) அவர்களின் இறப்பு

வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள் : 'ஸுலைமான் (அலை) அவர்கள் ஜின்களையும், ஷைத்தான்களையும் கடும் வேலைகளை வாங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த ஜின்களும், ஷைத்தான்களும் இப்லீஸிடம் சென்று, 'எங்களை ஸுலைமான் நபி அவர்கள் கடுமையான வேலைகள் மூலம் துன்புறுத்துகின்றார்கள்' எனக் கூறின.

அப்பொழுது இப்லீஸ், 'கற்களை சுமந்து செல்கிறீர்களே? வரும்பொழுது சும்மாதானே வருகிறீர்கள்?' எனக் கேட்டான். 'ஆம்' என அவர்கள் கூறினார்கள். 'அதனால் நீங்கள் ஓய்வாகத்தானே இருக்கிறீர்கள்' என்றான். இப்லீஸின் பேச்சைக் காற்று, நபி ஸுலைமான் (அலை) அவர்களிடம் கொண்டு போய் சேர்த்தது.

பின்னர், நபி அவர்கள் ஜின்களும், ஷைத்தான்களும் வரும்பொழுது கற்களைச் சுமந்து வருமாறும், செல்லும்பொழுது மண்ணை எடுத்துச் செல்லுமாறும் பணித்தார்கள். ஜின்கள் அதனையும் இப்லீஸிடம் கூறின. அப்பொழுது இப்லீஸ், 'நீங்கள் இரவில் தூங்குவதில்லையா?' எனக் கேட்டான். ஜின்கள், 'தூங்குகிறோம்' என்றனர். 'அதனால் உங்களுக்கு ஓய்வு கிடைக்கத்தானே செய்கிறது' என்றான். அச்சொற்களையும் காற்று நபி அவர்களிடம் கொண்டு சென்றது.

நபி அவர்கள் ஜின்களையும் ஷைத்தான்களையும் இரவும் பகலும் வேலை செய்யுமாறு பணித்தார்கள். அதனையும் ஜின்கள் இப்லீஸிடம் கூறின, 'நீங்கள் ஓய்வு பெற வழி எதிர்பார்த்துக் கொண்டிருங்கள்' என இப்லீஸ் கூறினான்.

ஸுலைமான் (அலை) சில நாட்களே உயிருடன் இருந்தனர்,

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : 'நபி ஸுலைமான் (அலை) அவர்கள் பைத்துல் முகத்தஸில் ஒரு மாதம், இரண்டு மாதங்கள், ஓராண்டு, ஈராண்டுகள் இப்படியே தொழுது வந்தனர். உணவும் குடிப்பும் அங்கேயே! அங்கேயே

ஷைத்தான்கள், ஜின்கள் யாவும் வேலை வாங்கப்பட்டனர். அப்பள்ளியில் புற்பூண்டுகள், செடி கொடிகள் முளைத்தால், ‘உன் பெயரென்ன?’ என்று வினவுவர். அவை பெயர்களைக் கூறும். ‘நீ ஏன் முளைத்தாய்?’ என வினவுவர். ‘இன்னின்ன காரியங்களுக்காக நான் முளைத்தேன்’ எனக் கூறும். எனவே, அவற்றை அந்தந்தக் காரியங்களுக்காக எடுத்துச் சென்று பயன்படுத்திக் கொள்வர்.’

ஒருநாள் பள்ளியில் தொழுது கொண்டிருக்கும் பொழுது, நபி அவர்களுக்கு முன்னால் ஒரு மரம் முளைத்தது, ‘உன் பெயரென்ன?’ எனக் கேட்டார்கள். ‘நான் கெடுக்கும் மரம்’ என்று அது கூறிற்று. ‘நீ ஏன் முளைத்தாய்?’ என்று நபி அவர்கள் கேட்டார்கள். ‘இந்த மஸ்ஜிதை கெடுக்க முளைத்தேன்’ எனக் கூறிற்று. எனவே அதைப் பிடுங்கி சுவரோரத்தில் நடச் சொன்னார்கள்.

பின்னர், ‘இறைவா! என் இறப்பை (மவ்த்தை) இந்த ஜின்கள் அறியாதவாறு மறைத்து விடு! ஜின்கள் தெய்வீகச் செயல்களை அறியமாட்டார்கள் என்பதை மனிதர்கள் அறிந்து கொள்வதற்காக மறைத்து விடு!’ என இறைஞ்சினார்கள். ஜின்கள், ‘நாங்கள் மறைவான விஷயங்களை அறிவோம்’ என்று கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தன. எனவேதான் ஸுலைமான் (அலை) அவர்கள் அவ்வாறு துஆ இறைஞ்சினார்கள். அதன் பின்னர் நபி அவர்கள் மிஹ்ராபில் நுழைந்து கைத்தடியை ஊன்றியவர்களாக இறைவனை வணங்கிக் கொண்டிருந்தனர். அந்நிலையிலேயே இறந்து விட்டார்கள்.

ஷைத்தான்களும், ஜின்களும் அவர்கள் வந்துவிடுவார்கள் என்றெண்ணியவாறு தங்கள் வேலைகளை விரைவாகச் செய்த வண்ணமிருந்தனர்.

நபி அவர்களின் உயிர் கைப்பற்றப்படுவதற்கு முன், மலக்குல் மவ்த்தைப் பார்த்து, ‘என் உயிர் கைப்பற்றப்படும் முன்னர் நீர் என்னிடம் அது பற்றிக் கூறுவீராக!’ எனக் கேட்டுக் கொண்டார்கள். மரண வேளை நெருங்கும் சமயம் இஸ்ராஈல் (அலை) வந்து, ‘ஸுலைமானே உம் உயிர் பிரிய ஒரு நாழிகை நேரமே உள்ளது’ என்றார்கள். அப்பொழுது நபி அவர்கள் ஷைத்தான்களை அழைத்து, வாயிலுக்கு முன்பாக ஒரு பெரிய இல்லத்தை எழுப்புமாறு கூறிவிட்டு தங்களின் ஊன்றுகோலில் சாய்ந்தவாறு தொழத் தொடங்கினார்கள். அந்நிலையில் இஸ்ராஈல் (அலை) அவர்கள் நபி அவர்களின் உயிரைக் கைப்பற்றிக் கொண்டார்கள். நபி அவர்கள் தடியின் மீது சாய்ந்தவாறே இருந்தார்கள்.

இன்னோர் அறிவிப்பின்படி, ஸுலைமான் நபி அவர்கள் ஒரு மாளிகையில் சென்று வாசலில் காவலரை ஏற்படுத்தி அவரிடம் எவரையும் உள்ளே விடக்கூடாது என்று ஆணையிட்டதாகவும், அந்நிலையில் வெண் துகில் அணிந்தவராக ஓர் இளைஞர் மாளிகையினுள் நுழைந்து,

‘அஸ்ஸலாமு அலைக்க யா ஸுலைமான்!’ என்று கூறியதற்கு, ‘வ அலைக்குமுஸ்ஸலாம்’ என அவர்கள் பதில் கூறிய பின், ‘வாசலில் காவல் இருக்க நீர் எவ்வாறு உள்ளே புகுந்தீர்!’ என நபி அவர்கள் வினவ, அதற்கு அவர், ‘எந்தக் காவல்காரனும் என்னைத் தடுக்க முடியாது. எந்த அரசனுக்கும் நான் அஞ்சமாட்டேன். இலஞ்சமும் பெறமாட்டேன். ஃபகீர்களையும், மன்னர்களையும், சுல்தான்களையும் சமமாகவே கருதி அவர்களின் உயிர்களைக் கைப்பற்றக் கூடியவன். அல்லாஹ்வின் ஆணையைக் கொண்டே மாளிகையினுள் நுழைந்தேன்’ எனக் கூறி உயிரைக் கைப்பற்றியதாகவும் கூறப்பட்டுள்ளது.

அப்பொழுது நபி அவர்கள் அஸாவின் மீது சாய்ந்த வண்ணமே இருந்தனர். ஓராண்டு வரை அவர்கள் இறந்த செய்தியினை மனிதர்கள், ஜின்கள் எவரும் அறியமாட்டார்கள் என்றும், பின்னர் ஒரு சிலர் அறிந்தனர் என்றும், மறைவான விஷயங்களை அவை அறியாது, தெரிந்தால் அவை ஈடுபட்டுள்ள பணிகளை மேற்கொண்டு தொடராது. நபி அவர்கள் உயிருடன் உள்ள நிலையில், ஜின்கள் நபி அவர்கள் தொழுவதை எட்டிப் பார்த்தால் அந்த ஜின்களெல்லாம் எரிந்துவிடும்.

அவர்கள் இறந்து ஓராண்டு கழித்த பின் ஒரு ஜின் துணிந்து எட்டிப் பார்த்தது. ஆனால் எரிந்து போகவில்லை. அவர்கள் மய்யித்தாக இருப்பதைக் கண்டு மனிதர்களிடம் சொல்லிற்று. பிறகு, கதவைத் திறந்து பார்த்தபொழுது, அவர்கள் சாய்ந்திருந்த அஸாவை கரையான்கள் அரித்துக் கொண்டிருந்தன.

அவர்கள் இவ்வுலகில் ஐம்பத்து மூன்று ஆண்டுகள் உயிர் வாழ்ந்தனர். அவர்கள் அரசாட்சி நடத்தியது நாற்பது ஆண்டுகள். பதின்மூன்றாம் அகவை(வயதி)யிலேயே அரியணை ஏறிவிட்டார்கள். ஆட்சிக்கு வந்து, பைத்துல் முகத்தஸ் பணியை நிறைவு செய்யத் தொடங்கி இரண்டாண்டுகளில் கட்டி முடித்தார்கள்.

*'அவர் இறந்து விட்டார் என்புதை அவர் சாய்ந்திருந்த தடியை அரித்த பூச்சியைத் தவிர வேறு எவரும் அந்த ஜின்களுக்கு அறிவிக்கவில்லை.'*

*(34:14)*

தங்களுக்கு மறைவான விஷயங்கள் யாவும் தெரியும் என ஜின்கள் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தன என்றும், அந்தப் பெருமையைத் தொலைக்கவே, அல்லாஹ் இவ்வாறு செய்தான் எனக் கூறப்படுகிறது. வல்லாஹு ஆலிமுல் ஙைபி வல் அஸ்ரார்.

அல்லாஹ்வே மறைவானவற்றின் இரகசியங்களை அறியக்கூடியவன்.

எனவே, இறையடியார்களே!

நம்மில் எவர் அல்லாஹ்விற்கு முற்றிலும் கட்டுப்பட்டு, அவனின் கட்டளைகளைக் குறைவின்றியும், பழுதின்றியும் செயல்படுத்துகின்றாரோ, அவருக்கு உலகத்திலுள்ள அனைத்துப் படைப்பினங்களும் கட்டுப்பட்டு, அந்நல்லடியார்க்கு ஊழியம் செய்யுமாறு அல்லாஹ் பேருதவி புரிந்து விடுவான்.

ஒரு முஸ்லிமுக்கு இறையச்சம்தான் மூலதனம். 'எவர் அல்லாஹ்விற்கு அஞ்சி வாழ்கின்றாரோ அவருக்கு அனைத்துப் பொருளும் அஞ்சும்' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே, நாம் இறையச்சம் கொண்டோராக வாழ்ந்து, அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பெற முயல்வோமாக!